விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள்:இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 07 வெள்ளிக்கிழமை (20.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 032

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## தமிழர் தம்மை தாமே ஆளும் அரசியலமைப்பு உருவாகும்!

### சுமந்திரன் எம்.பி திடசங்கற்பம்



(மட்டக்களப்பு)

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் எமது மக்கள் தங்களை தாங்களே ஆளக்கூடிய வகையிலான உரிமையினை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தேவநாயகம்

23ஆம் பக்கம் பார்க்க...

## அரசியல் தீர்வைப் பெறுவதற்கு ஏற்ற சந்தர்ப்பம் கிட்டியுள்ளது

### முழுமையாக அதை பயன்படுத்துவோம்-சம்பந்தன்



(மட்டக்களப்பு)

அரசியல்தீர்வுக்கான தற்போதைய சந்தர்ப்பத்தை நாம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நான்காவது தமிழர் பொங்கல் விழா மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு

23ஆம் பக்கம் பார்க்க...

## யாழ்.போதனா விரிவாக்கம் சுற்றயல் காணிகளை சுவீகரிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் மேலதிக விரிவாக்கத்துக்கு யாழ்.நகர்பகுதியில் உள்ள சுற்றயல் காணிகளை சுவீகரிக்க முடியாது என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டு ஏனைய பிரிவுகளை நகருக்கு வெளியே அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான விபரம் ஆராயப்பட்ட

04ஆம் பக்கம் பார்க்க...

# சமஷ்டி தீர்வுக்கு இணக்க முடியாது

## சிறிலங்கா சுதந்திர கட்சி மீளவும் அறிவிப்பு



(கொழும்பு)

சமஷ்டி மூலமாக தேசிய பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என்ற அழுத்தத்தை பிரயோகித்து அல்லது சர்வதேச தூண்டுதலை ஏற்படுத்தி அதனூடாக எவரேனும் பேச்சுவார்த்தைக்கு வந்தால் அந்த பேச்சுவார்த்தைக்கு ஒருபோதும் இணங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க...

## ராஜிதவின் மகன் சத்துரு எம்.பி யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவின் மகனும் பாராளுமன்ற உறுப்பினருமான சத்துரு சேனாரத்ன நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். யாழ்ப்பாணத்தை தளமாக கொண்டியங்கும் முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின

24ஆம் பக்கம் பார்க்க...

## 'ஜல்லிக்கட்டை நடத்த விடு'

### கிளிநொச்சியில் நேற்று போராட்டம்



23ஆம் பக்கம் பார்க்க...

## 'நெடுந்தாரகை' படகு இன்று சேவைக்காக கையளிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதிப்பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட நெடுந்தாரகை படகு வடக்குமாகாண முதலமைச்சர் மற்றும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரினால் பயணிகள் சேவைக்காக இன்றைய தினம் கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிகாட்டுவான்-நெடுந்தீவுக்கிடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்காக உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 150 மில்லியன் ரூபாய் செலவில் புதிதாக ஓர் படகுஉருவாககப்பட திட்டமிடப்பட்டது.

80 பயணிகள் பயணிக்கக் கூடிய போதியவசதிகளுடன் புதிய படகு அமைக்கப்பட்டது.

23ஆம் பக்கம் பார்க்க...


## வடக்கு,கிழக்கில் பரவலாக மழை!

(கொழும்பு)

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் பாரிய மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்

04ஆம் பக்கம் பார்க்க...

## லொறி-மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் பலி



## ரவிராஜ் கொலை வழக்கு

### மேன்முறையீட்டு மனு நேற்று நிராகரிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் படுகொலை வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிரான மேன்முறையீட்டு மனு நேற்று வியாழக்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் கடற்படையின் புலனாய்வுத் துறையினரும், கருணா குழு உறுப்பினர்களும் குற்றம்

24ஆம் பக்கம் பார்க்க...

## மக்களின் தேவைகளை புறந்தள்ளி கட்சிகளை வளர்க்க முக்கியத்துவம்

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா சாடல்




(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் தமது கட்சிகளை வளர்ப்பதற்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள் என தெரிவித்த சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வ

23ஆம் பக்கம் பார்க்க...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி
## பொது மக்களுக்கான அறிவித்தல்

பிரதேச சபை எல்லைக்குள் வளர்க்கப்படும் சகல வளர்ப்பு நாய்களையும் 31.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச சபையின் உப அலுவலகங்களான நெல்லியடி உப அலுவலகம், கட்டைவேலி உப அலுவலகம், உடுப்பிட்டி உப அலுவலகங்களில் பதிவு செய்து உரிமத்தினை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். இத் திகதிக்குப் பின்னர் பதிவு செய்யப்படாது வீதிகளில் உலாவும் சகல நாய்களும் பிடிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

அ.வினோராஜ்,
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
20.01.2017

(சி-7298)

## யாழ்.பொது நூலகம் முன்பாக நாளை
# ஜல்லிகட்டுக்கு ஆதரவாக கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் ஜல்லிக்கட்டு மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க கோரியும், ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழகத்தில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஆதரவாக நாளை மாலை நான்கு மணியளவில் யாழ். பொது நூலத்திற்கு அருகாமையில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த போராட்டத்தை தமிழ்த் தேசிய பண்பாட்டு பேரவை உட்பட பல அமைப்புக்கள் ஒன்றிணைந்து முன்னெடுக்கவுள்ளன.

இந்த போராட்டத்திற்கு ஆதரவாக வடக்கில் உள்ள அனைத்து இளைஞர்களும திரண்டு போராட முன்வர வேண்டும் என குறித்த போராட்டத்தின் ஏற்பாட்டளர்களான தமிழ்த்தேசிய பண்பாட்டு பேரவையினர் கோரியுள்ளனர்.

மேலும் ஈழத்தவர்கள் கொல்லப்படும் ஒவ்வொரு முறையும் தமிழக மக்கள் போராடியதனையும் நினைவில் கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் சிலரும் ஆதரவு தெரிவித்து தமிழக மக்களின் கலாசார உரிமைக்காக குரல் கொடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## கடையும் காணியும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் றோட்டில் கன்னாதிட்டி சந்திக்கு அண்மையில் கடையுடன் கூடிய நிலம் விற்பனைக்குண்டு. ஏறக்குறைய 14 அடி அகலம் 120 அடி நீளம் கொண்டது. 13 குழிக்கு குறையாத நிலம்.

**தொடர்பு : 077 367 7144, 077 054 4862**

(சி-72295)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### பாலகிருஷ்ணன் தனுசிகா

தேசிய ரீதியாக நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் 12 வயதுப் பிரிவில் முதலாம் இடம் பெற்று தங்கம் வென்ற எமது பாடசாலை மாணவி செல்வி பாலகிருஷ்ணன் தனுசிகாவை மனதார பாராட்டி நிற்பதுடன் மேலும் பல சாதனை படைக்க வாழ்த்துகின்றோம். மாணவியின் சாதனை வெற்றியில் பயிற்றுவிப்பாளராக இருந்த எமது பள்ளி ஆசிரியர் திரு.ம.வினோகாந்தன் அவர்களையும் நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(சி-7300)

## மணிவிழா வாழ்த்து

திரு.
தியாகராஜசிவஐயர்
கிருபாகரன் (ஐயா)
(Sp.Trd.Agri,SLTS-2 I)



எமது பாடசாலையில் ஆசிரியராக, உப அதிபராக, பதில் அதிபராகக் கடமையாற்றி அகவை அறுபதிலே இன்று (20.01.2017) மணிவிழாக்காணும் திரு.தியாகராஜசிவஐயர் கிருபாகரன் (ஐயா) அவர்களை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருளைப் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்

(7560)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி
**கெங்கேஸ்வரன் உஷாளினி**
புள்ளிகள் – 162

2016இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மு/சி.சி. தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று 162 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த கெங்கேஸ்வரன் தீபா தம்பதிகளின் ஏக புதல்வி கெ.உஷாளினி அவர்களை பாராட்டி மேன்மேலும் பல பட்டங்கள் பெற வாழ்த்துகிறோம். இவரது பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களையும் சபாயுதன், மயூரன், சுகந்தி ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பிரதான வீதி,
முள்ளியவளை.

இவ்வண்ணம்...
குடும்பத்தினர்.

(சி-7293)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கெங்கேஸ்வரன் தீபா**

பிறப்பு: 24.09.1980 -
இறப்பு: 02.01.2016

எங்கள் ஆருயிர் செல்வ மகளே நீர் எங்களை விட்டு பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டது எம்மால் நம்பவே முடியவில்லை! ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டானாலும் உம்மை மறக்க மாட்டோம்.

அன்னாரின் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு 20.01.2017 இன்று பகல் 11 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி,
முள்ளியவளை.

இவ்வண்ணம்...
குடும்பத்தினர்.

(சி-7293)

# புதிய அரசியல் அமைப்பை நிறைவேற்ற விடமாட்டோம்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

**(கொழும்பு)**


**நாட்டைப் பிளவுபடுத்தும் அரசியல் யாப்பிற்கு நாம் ஒருபோதும் இடம்கொடுக்கப் போவதில்லை. அதனை நிறைவேற்ற விடமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் வீரக்கெட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியல் யாப்பு நாட்டை பிளவுபடுத்தும் திட்டமே. இதனை நாம் சொல்லவில்லை இப்போதைய ஆட்சிக்கு வித்திட்ட அத்துரலிய ரத்ன தேரரே கூறியுள்ளார்.

இதனைப்பற்றி நாம் பேசினாலோ, நாட்டை பிளவுபடுத்தும் அரசியல் யாப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்தாலோ சிறைச்சாலைக்கு கொண்டு செல்கின்றார்கள்.

இந்த ஆட்சிக்கு நாம்



தீர்மானமாக சொல்லிக் கொள்கின்றோம் நாட்டை பிளவு படுத்தும் யாப்பிற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம் எனவும் நாமல் மேலும் தெரிவித்தார். (இ-3)

## அநுர, சுமித் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீனின் கொலை தொடர் பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க, நாரஹேன்பிட்டிய பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரின் விளக்க மறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்களை பெப்ரவரி மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.(இ-3)

## தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கடந்த சில நாட்களாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் குறித்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ள நிலையில் நேற்றைய தினம் கொழும்பில் திரண்ட பலரும் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் வரை தனியார் மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்குதல் நிறுத்தப்பட வேண்டும்.

தனியார் மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவர்களின் எதிர்கால நலன் கருதி இலங்கை மருத்துவ சபையினால் சுயாதீனமாக அவர்களுக்கு பொருத்தமான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

தனியார் மருத்துவக் கல்லூரி மற்றும் நிவில் பெர்னாண்டோ வைத்தியசாலை முற்று முழுதாக அரசுடமயமாக்கப்படுவதுடன் இலங்கை மருத்துவ சபையினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு அரச மருத்துவ பீடமாக்கப்பட வேண்டும் போன்றதான கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளனர். (இ-3)

## யாழில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க ஒப்பந்தகாரர்கள் பற்றாக்குறையே சவால்

### அரச அதிபர் வேதநாயகன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு ஒப்பந்தகாரர்கள் பற்றாக்குறை பாரிய சவாலாகவுள்ளது என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்உரையாற்றுகையில்,

2016 ஆம் ஆண்டு அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதியினை பல சவால்களின் மத்தியிலும் வெற்றிகரமாக செலவளித்து திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம்.

ஆனால் எமது மாவட்டத்தல் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நல்ல ஒப்பங்தகாரர்கள் இல்லை என்பது பிரதான சவாலாக உள்ளது. இம்முறை 50 மில்லியனுக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு அகில இலங்கை ரீதியான ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பிக்க முடியும். மிகுதி 50 மில்லியனுக்கு உட்பட்ட திட்டங்களை மாவட்டத்திலுள்ள ஒப்பந்தகாரர்கள் செயற்படுத்த வேணடும். அந்தவகையில் யாழ். மாவட்ட ஒப்பந்தகாரர்களை நியமிப்பது பாரிய சவாலாக உள்ளது.

கடந்த கால போகத்தில் மழை குறைவாக பெய்ததால் இந்தவருடம் பாரிய வரட்சியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இது எமக்கு பாரிய சவாலாகவும் உள்ளது.


எமது மாவட்டத்தில் உள்ள பெருமளவான குளங்கள் மற்றும் நீர்த்தடுப்பணைகள் புனரமைக்கப்படாதுள்ள காரணத்தினால் பெய்த மழையையும் சேகரிக்க முடியாமல் போயுள்ளது. அத்துடன் கட்டடங்கள் அதிகரித்துள்ளமையால் நிலத்தடி நீர் குறைவாகவுள்ளது. ஆகவே இம்முறை வரட்சியால் பாரிய சவாலை எதிர்நோக்கவுள்ளோம்.

ஜனாதிபதியின் திட்டத்தின கீழ் 2017 ஆம் ஆண்டு வறுமையை தணிப்பதற்குரிய ஆண்டாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

அந்தவகையிலவறுமையை ஒழிக்க பொருத்தமான திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்தி எமது மாவட்டத்தில் உள்ள வறுமைக்கோட்டுக் குட்பட்டவர்களின் வாழ்வை மேம்படுத்த பொருத்தமான திட்டங்களை முன்வைத்து நடைமுறைப்படுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மாலபே சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியை தடை செய்யக்கோரி வடக்கு சபையில் தீர்மானம்

### மருத்துவ பீட மாணவர்கள் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக்கல்லூரியை தடைசெய்யக்கோரி வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றுமாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்றைய தினம் வடமாகாண விவசாய அமைச்சர் மற்றும் வட மாகாண சபை உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாலபே பகுதியல் அமைந்துள்ள சைற்றம் (SAITM) தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான கோரிக்கைகளை அரசிடம் முன்வைத்து இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவர்கள் நாடுமுழுவதும் வகுப்பு புறக்கணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

நான்காவது நாளாக தமது வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டத்தினை தொடர்ந்து சமூகமட்டத்தில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


அதன்படி நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் தமது விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதே வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரை சந்தித்து மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

குறித்த தனியார் மருத்துவக்கல்லூரியினால் நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் எதிர்காலத்தில் பல்வேறு விளைவு ஏற்படவுள்ளது என்றும் குறித்த விடயம் திட்டமிட்டு மக்கள் மத்தியில் மறைக்கப்பட்டு வருகின்றது.

எனவே இது தொடர்பில் மருத்துத்துறையினர் தரப்பில் பல எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாண சபையில் இதற்கான தீர்மானத்தை நிறைவேற்றும் பட்சத்தில் தம்முடைய போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக அமையும் எனவும் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் மற்றும் உறுப்பினர் தாம் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் இவ்வாறான திட்டங்களை முற்றுமுழுதாக எதிர்ப்பதாகவும் இது குறித்து அடுத்துவரும் சபை அமர்வில் பேசுவதாகவும் மாணவர்களுக்கு தெரிவித்திருந்தனர். (இ -9)

# ஏறிகணை நேற்று மீட்பு



(மல்லாவி)

இறுதி யுத்தம் நடைபெற்ற முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் டாங்கிகளைத் தகர்க்கும் எறிகணை ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு சென்றிருந்த இராணுவத்தினர் குறித்த எறிகணையை பாதுகாப்பாக மீட்டு எடுத்துச் சென்றனர். (செ-15)

# ஸ்மித் சதம் பாகிஸ்தானை வீழ்த்தியது ஆஸி




பேர்த்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான 3-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா 92 ஓட்டங்கள் வித்தியாசத்திலும், 2-வது போட்டியில் பாகிஸ்தான் 6 விக்கெட் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றன.

இரு அணிகள் மோதிய 3-வது போட்டி பேர்த் மைதானத்தில் நேற்று நடந்தது. நாணய சுழற்ச்சியில் வென்ற அவுஸரேலிய அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி பாகிஸ்தான் அணியின் மொகமட் ஹபீஸ், ஷர்ஜீல் கான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஹபீஸ் 4 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். அடுத்து பாபர் ஆசம் களம் இறங்கினார். இவர் ஷர்ஜீல் கான் உடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஷர்ஜீல்கான் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழக்க, பாபர் ஆசம் 84 ஓட்டங்கள் சேர்த்தார். அதன் பின் வந்த சொயிப் மலிக் (39), உமர் அக்மல் (39) ஓரளவிற்கு ஓட்டங்கள் சேர்க்க, பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 263 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 264 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா அணியின் வோனர், கவாஜா ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். கவாஜா 9 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், வோனர் 35 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டம் இழந்தனர்.

3-வது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஸ்மித், ஹேண்ட்ஸ்காம்ப் அணியை வெற்றியை நோக்கி அழைத்து சென்றனர். ஹேண்ட்ஸ் காம்ப் 82 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டம இழந்தார். ஆனால் ஸ்மித் சிறப்பாக விளையாடி சதம் அடித்து அணியை வெற்றி பெறவை த்தார். அவுஸ்திரேலியா 45 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித் தியாசத்தில் அபார வெற் றி பெற்றது. ஸ் மித் 108 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலியா ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கிடையிலான 4-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி சிட்னியில் 22-ந் திகதி நடைபெறவுள்ளது. போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலிய அணித்தலைவர் ஸ்மித் தெரிவாகிவுள்ளார். (க)

# வித்தியா கொலை: சந்தேக நபர்கள் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் 12 பேரும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்களை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பதில் நீதவான் ஆர்.சபேசன் சந்தேகநபர்களுக்கான விளக்கமறியல் நீடிப்பு உத்தரவை பிறப்பித்துள்ளார்.

யாழ்பாணம் புங்குடுதீவில். மாணவி சிவலோகநாதன் வித்தியா கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சுற்றயல் காணி...

போதே மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்பேருந்து நிலைய காணியை யாழ் போதனா வைத்தியசாலையின மேலதிக விரிவாக்க தேவைக்கு சுவீகரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் இருந்து அண்மையில் உரிய அதிகாரிகளுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விடயம் தொடர்பாக கேள்வியெழுப்பப்பட்ட போது யாழ் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.பவானந்தராஜா கருத்து தெரிவிக்கையில்,

யாழ் போதனாவைத்தியசாலையின் அபிவிருத்திக்கு தேவையான காணிகள் தொடர்பாக 20 வருட அபிவிருத்தி திட்டமீ ஒன்றை தயாரித்துள்ளோம்.

அதில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அருகில் உள்ள யாழ் மாநகரசபைக்கு சொந்தமான காணியை கேட்டிருந்தோம். ஆனால் அது உடனடியாக தேவையில்லை என்றும் பல வருடங்களுக்கு பின்னர் தேவைப்படின் அந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தக்கூடிய தாக இருக்கும் என்பதற்கமைய அப்பகுதியை கோரியுள்ளோம். ஆனால்பேருந்து நிலைய காணியை தேவை என்று கேட்கவில்லை என தெரிவித்தார்.

இவ் விடயம் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.பேருந்துநிலைய காணியை யாழ்.போதனாவைத்தியசாலையின் தேவைக்கென சுவீகரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் இருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகளை யாழ்.நகருக்கு வெளியில் மாற்றுமாறு பல முறை கூறியிருந்தோம். ஆனால் அது தொடர்பான திட்டங்கள் எவற்றையும் நீங்கள் செய்வதாக தெரியவில்லை.

நகருக்கு வெளியே விசேட பிரிவுகளை அமைத்தால் மக்கள் தேடிப்போவார்கள். அனைத்தையும் யாழ்.நகருக்குள் அமைக்க வேண்டும் என்றால் இது யாழ்ப்பாண நகரமா இல்லை வைத்தியசாலை நகரமா என்ற கேள்வி மக்களிடம் தோன்றியுள்ளது.

பொலிசுக்கும் வைத்தியசாலைக்கும் சிறைக்கும் தான் யாழ் நகர் பகுதியில் உள்ள காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. அனைத்தையும் வேறு ஆட்களுக்கு கொடுத்து விட்டு அடிமையாகி உள்ளோம்.

செம்மணி, நாவற்குளி, தீவகம் போன்ற பகுதிகளில் இந்த வைத்தியசாலைகளை அமையுங்கள். இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள், புத்திஜீவிகள், கல்வியாளர்கள் நிபுணர்கள் உடன் இணைந்து கலந்துரையாடி தீர்மானம் நிறைவேற்றுங்கள்.

ஏற்கனவே அமைக்கப்பட்ட திட்டங்களை மாற்றி அமைத்து வைத்தியசாலைக்கென யாழ்.நகர்ப்பகுதிக்குள் காணி சுவீகாக்கப்படுவதற்கு முடிவு கட்ட வேண்டும். வைத்திய சாலை விரிவாக்கம் தேவை ஆனால் வெளி இடங்களில் அதை மேற்கொள்ளளுங்கள்.

இவற்றை மீறி இங்கு காணிகள் சுவீகிக்கப்பட்டு கட்டடங்கள் அமைத்து திறப்பு விழா செய்வதாக இருந்தால் இப்பகுதி கலவர பகுதியாக மாறும். ஆகவே காணி சுவீகரிக்கும் வேலையை இத்துடன் விடுங்கள். இங்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் அரச அதிபர் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என தெரிவித்து ஏகமனதாக தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தனர். (செ-9)

## வடக்கு, கிழக்கில்...

தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இடைக்கிடை மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழையும் பெய்யும் என நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காலை வேளையில், குளிராக காணப்படும் என்பதோடு, மேல், சப்ரகமுவ, தெற்கு, மத்திய மாகாணங்களில் பனிபடர்ந்த நிலை காணப்படும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுளது. (செ-11)

# ரியல் மாட்ரிட்டின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது செவில்லா



ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கிளப் அணியான ரியல் மாட்ரிட் 40 போட்டிகளில் தொடர் வெற்றி பெற்று சாதனை பெற்றிருந்தது.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை லா லிகா தொடரில் ரியல் மாட்ரிட் அணி, செவில்லா வாலெனசியா அணியை எதிர்கொண்டது.

இந்த ஆட்டத்தின் முதல்பாதி நேரத்தில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை.

67ஆவது நிமிடத்தில் ரியல் மாட்ரிட் அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது.

இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி ரொனால்டோ கோல் அடித்தார். இதனால் ரியல் மாட்ரிட் 1-0 என முன்னிலை பெற்றது.

அதன்பின் 85ஆவது நிமிடத்தில ரியல்மாட்ரிட் அணியின் தலைவர் செர்ஜியோ ரமோஸ் சேம்சைடு கோல் போட 1-1 என சமநிலைப் பெற்றது.

90 நிமிடங்கள் முடிந்து கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது.

அப்போது 91ஆவது நிமிடத்தில் செவில்லா அணியின் ஸ்டீவன் ஜோவெடிக் சிறப்பாக கோல் அடிக்க, செவில்லா 2-1 என வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ரியல் மாட்ரிட்டின் 40 தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

லா லிகா தொடரில் 17 போட்டிகளில் 40 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், செவில்லா 18 போட்டிகளில் 39 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும், பார்சிலோனா 18 போட்டிகளில் 38 புள்ளிகளுடன் 3-வது இடத்திலும் உள்ளது.

# பரபரப்பான ஆட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது இந்தியா



இங்கிலாந்து அணிக்கு எதிரான 2-வது ஒருநாள் போட்டியில் இந்திய அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2 - 0 என கைப்பற்றியுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒடிசா மாநிலத்தில் உள்ள கட்டாக்கில் நேற்று நடைபெற்றது. நாணய சூழற்சியில வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனையடுத்து விளையாடிய இந்திய அணி யுவராஜ் சிங்(150) மற்றும் டோனி(134) ஆகியோரின் அபார சதத்தால் 50 ஓவர்கள் முடிவில 6 விக்கெட் இழப்பிற்கு 381 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 382 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணி விளையாட தொடங்கியது. ஆனால் அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 366 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதனால் பரபரப்பான ஆட்டத்தில் 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அணியில் ராய் 82(73), மோர்கன் 102(81), மொயின அலி 55(43) ஆகியோர் அபாரமாக விளையாடி ஓட்டம் குவித்தனர்.




இந்திய அணி தரப்பில் அஸ்வின் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட தொடரில் இந்திய அணி 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகராக இந்தியாவின் யுவராஜ் சிங் தெரிவானார். (க)

# சாவகச்சேரியில் இடம்பெற்ற கோரவிபத்தில் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்கான சர்வமத வழிபாடு நேற்று இடம்பெற்றது




கடந்த வருட இறுதியில் சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்ற பாரிய வாகன விபத்தில் உயிரிழந்த பதினொரு பேருக்குமான ஆத்ம சாந்திக்கான சர்வமத வழிபாடு விபத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களின் பங்கேற்புடன் விபத்து இடம்பெற்ற அதே இடத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றது.

கடந்த வருடம் மார்கழி மாதம் 17 ஆம் திகதி சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் தென்னிலங்கையில் இருந்து சுற்றுலா வந்த ஹயஸ் வாகனமும் இ.போ.ச பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் ஹயஸில் பயணித்த 10 பேர் சம்பவ இடத்திலும் ஒருவர் வைத்தியசாலையிலும் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தொடர்பான வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதற்கு முன்பாகவே விபத்து இடம்பெற்ற இடத்தில் சர்வமத வழிபாடு இடம்பெற்றது. இதில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களும், உயிரிழந்தவர்களின் உறவுகள், விபத்தில் சிக்கிய பேருந்தின் சாரதி, சாகச்சேரி நீதிமன்ற உத்தியோகத்தர் (முதலியார்), சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வணிகர் கழகத்தினர், பொதுமக்கள் என பெருமளவானோர் பங்கு கொண்டனர். இதன்போது பௌத்த மற்றும் இந்து முறைப்படி சமய சடங்குகள் இடம்பெற்றன. இதன்பின்னர் நீதிமன்ற உத்தியோகத்தர், ஓய்வு பெற்ற அதிபர் அருந்தவபாலன் மற்றும் உயிரிழந்தோரின் உறவினர் ஒருவரும் அஞ்சலி உரைகளை ஆற்றினர்.

இறந்தவர்களின் உறவினர் ஒருவர் கூறுகையில்,

நாம் எமது சொந்தங்களை இழந்திருக்கின்றோம. இது எமக்கு பாரிய இழப்பாகும். விபத்து இடம்பெற்ற பொழுது எதுவித பேதங்களும் இன்றி எமது உறவுகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட தமிழ் உறவுகளை நாம் என்றும் மறவோம் எனவும் இனிமேல் இப்படி ஒரு விபத்து யாருக்கும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று நாம் பிரார்த்திக்கின்றோம் என தெரிவித்தார்.




(படங்கள்: கிஷோர்)

இ.போ.ச.பேருந்தின் சாரதி கருத்து தெரிவிக்கையில், இப்படி ஒரு பாரதூரமான விபத்து இடம.பெறும் என நான் ஒரு கணமும் எதிர் பாரக்கவில்லை. இந்த விபத்து நிகழ்ந்ததில் இருந்து நான் கடும் மன உளைச்சலில் உள்ளேன். இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவர்களின் துயரில் நானும் பங்கெடுக்கின்றேன் என தெரிவித்தார். நிகழ்வின் பின்னர் தமது உறவுகளை காப்பாற்ற முயற்சித்த அப்பகுதியை சேர்ந்தவர்களோடு உரையாடி அவர்களுக்கு நன்றி கூறிய நெகிழ்ச்சியான சம்பவம் நிகழ்ந்தது. இந்தச் சர்வமத பிரார்த்தனையை சாவகச்சேரி நீதிபதி திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரனின் அறிவுறுத்தலுக்கமைய சாவகச்சேரி வணிகர் கழகத்தினர் ஒழுங்கமைததனர். (இ-89)

## ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை கிடைத்தால் ஐரோ.சந்தைக்கு இலங்கை உற்பத்திகள்

### நிதியமைச்சர் ரவி தகவல்

(கொழும்பு)

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை கிடைப்ப தன் ஊடாக ஐரோப்பிய சந்தைக்கு இலங்கை யின் உற்பத்திகளை அனுப்ப முடியும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரி வித்துள்ளார். சுவிட்சர்லாந்தின் லாவோஸ நகரில் இடம் பெற்றுவரும் உலக பொருளாதார மாநாட் டில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இன்னும் சில மாதங்க ளில் இலங்கைக்கு ஜி.எஸ். பி.பிளஸ் வரிச்சலுகை கிடைக கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை அங்கு உரையாற்றியுள்ள அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அன்றாட வாழ்வில் டிஜிட்டல் வசதிகளை பயன்படுத்துவது தொடர் பில் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-3)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் யாழ். மறை மாவட்ட றோமன் கத்தோலிக்க திருச்சபையும் இலங்கை திருச் சபை உதவித் தலைமைப் பீடமும் இணைந்து ஸ்ரீ நவீன் சௌலாவுடன் அன்னை திரேசா இன்று கொல்கத்தாவின் புனித திரேசா எனும் தலைப்பிலான கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது.

இக்கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் புனித வளன் கத்தோலிக்க அச்சகம் பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெறும். (இ

## பாக்.பிரதமர் நவாஸுடன் பிரதமர் ரணில் சந்திப்பு

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக் கிடையில் இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்ப டுத்திககொள்ள தேவையான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோருக் கிடை யில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்தில் இடம்பெறும் உலக பொருளாதார மாநாட்டின் போதே இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யு மாறு பாகிஸ் தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் பிரதமர் ரணில் விககரம சிங்கவுக்கு இதன்போது அழைப்பு விடுத்தார். சார்க் அமைப்பின் எதிர்காலம்



மற்றும் பிராந்திய ரீதியான பிரச்சினைகளை கலந்துரையாடல்மற் றும் சமரசமாக தீர்த்துக் கொள்ளுதல் தொடர்பிலும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ)

## இராசி பலன்

20.01.2017

(தை 07, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

அட்டமி முன்னிரவு 7.16 மணிவரை

சித்திரை காலை 7.42 மணிவரை

சுபநேரம் 6.35-8.05 மணிவரை

இராகுகாலம் 11.05-12.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | . | | |
| சுக் கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி | குரு சந் | |

**மேடம்:** உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், உடல்நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**இடபம்:** கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பிரியமான சிலருடன் மனம்விட்டுப் பேசுவீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொல்லை தந்த சிலரே உதவ முன்வரலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்புகள் அடைவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், மகிழ்ச்சிதரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்:** சுபகாரியங்களுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மகரம்:** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும், குடும்பத்தினரிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்பட்டு விலகும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.



யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மையில் காலமான யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் உப அதிபர் திருமதி. சரஸ்வதி ஆறுமுகம் நினைவாக யாழ்.போதனா வைத்தியசாலை பெண்கள் வோட் 02 இல் நோயாளர் ஆறுதல் பெறுவதற்கான பூங்கா அமைக்கப்பட்டு வைத்திய நிபுணர் பேரானந்தராஜா திறந்து வைத்தார். நினைவுப் பூங்காவை அமரரது குடும்பத்தவர்கள் உருவாக்கியிருந்தனர்.





யா/கரணவாய் மணியகாரன் தோட்டம் பாடசாலையின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவம் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் தம்பிப்பிள்ளை மணிசுந்தரம் கலந்து சிறப்பித்தார்.

(படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# தைப்பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

திடற்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை இந்து மன்றமும் கலையெழில் சிறுவர் கழகமும் இணைந்து நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நரசிங்க வைரவர் ஆலய மண்டபத்தில் சி.கிருஷாந் தலைமையில் இடம்பெறும்.


இந்நிகழ்வில் யாழ். வயாவிளான் மத்திய கல்லூரி உப அதிபர் கௌ.ஸ்ரீதரன் பிரதம விருந்தினராகவும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.மங்களதாஸ், நிக்கலஸ் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலய ஆசிரியர்களான பி. மணிவண்ணன், ச.ராஜேந்திரகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் நடத்தும் தைப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை பி.ப 4.30 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இந்து வாலிபர் சங்க உப தலைவர் ச.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெறும்.


இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாயம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார். (இ-7)

# கோழிக்கடை கழிவுகளால் பாரிய சுகாதாரச் சீர்கேடு



சாவகச்சேரி நுணாவில் பகுதியில் அமைந்துள்ள கோழி இறைச்சி கடையின் கழிவுகளால் அயலிலுள்ள பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அயலில் அமைந்துள்ள கிணற்றுக்கு அருகிலும் கோழிக்கழிவுகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக சாவகச்சேரி நகரசபையின் செயலாளர் க.சண்முகதாசனிடம் வினவிய பொழுது இக்கடை கடந்த வருடத்தில் நகராட்சி மன்றத்தின் அனுமதி பெற்றே இயங்கி வந்தது. ஆனால் அப்பகுதி மக்கள் குறித்த பகுதியில் கடை அமைவதை விரும்பாத காரணத்தினால் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்டிருந்தனர். இதனால் குறித்த கடையை கடந்த வருடம் 31.12.2016 உடன் மூடுமாறு அறிவித்தல் வழங்கியிருந்தோம். எனினும் குறித்த கடை இயங்கி வருகின்றது. எனினும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து எமக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் குறித்த கடையின் உரிமையாளர் வாடகை ஒப்பந்தத்தினை உடனடியாக இரத்துச் செய்யுமாறும் அறிவித்தல் வழங்கியுள்ளோம் எனவும் தெரிவித்தார். (இ-89)

# வேப்பம் குற்றியுடன் லொறி சாரதி கைது



காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தையிட்டிப்பகுதியில் சிறு விறகுக்கான அனுமதிப்பத்திரத்துடன் வேப்பம் குற்றிகளை ஏற்றி வந்ததனால் லொறி சாரதி காங்கேசன்துறை பொலிஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். (இ-60)

# மாற்றுத்திறனுடைய மாணவர் விளையாட்டுப் போட்டி இன்று

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் மாற்றுத் திறனுடைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யா/நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும். வடமராட்சி கல்வி வலய விசேட கல்வி ஆலோசகர் தெய்வ கடாட்சம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிற்றம்பலம் புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். (இ-3-60)



யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கால்கோள் விழா அண்மையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கச்சாய் அ.த.க.பாடசாலையின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் திருமதி.சிவலோகநாயகி நவபாலன், சிறப்பு விருந்தினராக கொடிகாமம் இலங்கை வங்கி அலுவலர் திருமதி கௌசிகா பிரதாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மெய்வல்லுநர் போட்டி

யா/ கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் காசிநாதர் குணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக சமுதாய மருத்துவத் துறை மருத்துவ யோசேப்பின் திருமகள் சிவசங்கர், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற்கல்வி) செல்வி கிருஷ்ணபிள்ளை பிரதீபா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# 27 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக்கடன்

நயினாதீவு தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஒரு மில்லியன் ரூபா நிதி 27 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடனாக கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.


கடந்த காலங்களில் வழங்கப்பட்ட கடன்கள் பயனாளிகளால் உரிய காலத்தில் திருப்பி செலுத்தப்படாததால் குறித்த சங்கத்தின் கடன் திட்டம் பின்னடைவை சந்தித்திருந்தது. ஆயினும் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரூடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு பெரும்பாலும் அறவீடுகள் பூர்த்தியான நிலையில் 13ஆம் கட்டமாக ஒரு மில்லியன் ரூபா நிதி 27 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடனாக வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நயினாதீவு தெற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி. என். சிறீறங்கா மற்றும் வேலணை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் ஆகியோர் கலந்துகொண்டு குறித்த கடன் தொகைகளை வழங்கி வைத்தனர். (இ-3)

# மஹா மிருத்துஞ்ஜய யாகம்

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைவதையொட்டியும் உலக நலன்களுக்காகவும் மஹா மிருத்துஞ்ஜய மந்திர யக்ஜம் (யாகம்) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இவ் யாகம் நாளை மறுதினம் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சேர். பொன்.இராமநாதன் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் இடம்பெறும். (இ-3)

# சர்வதேச முகவர் அமைப்புடன் வடமாகாண அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான செயற்றிட்டங்கள் தொடர்பில் கனேடிய சர்வதேச முகவர் அமைப்புடன் (சீடா) வடக்கு சுகாதார அமைச்சர் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி மற்றும் சுகாதார அபிவிருத்தி தொடர்பான சர்வதேச கருந்தரங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு கனடா சென்றுள்ள அமைச்சர் சத்தியலிங்கம் தலைமையிலான குழு நேற்று முன்தினம் கனேடிய சர்வதேச முகவர் அமைப்பின் (சீடா) இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் குளோறியா விஸ்மன் தலைமையிலான பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போது வடக்கு மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் திறன்விருத்தி திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக சுகாதார அமைச்சரின் ஊடக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கையின் முன்னேற்றங்களை வரவேற்கின்றார் சுவிஸ் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் ஏற்படுத்தப்பட்ட சாதகமான படிமுறைகளை சுவிட்ஸர்லாந்து வரவேற்றுள்ளது. ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக சுவிட்சர்லாந்து ஜனாதிபதி யூபிஸ் லொய்ட்காட் தெரிவித்துள்ளார்.



லாவோஸ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற உலக பொருளாதார மன்ற சந்திப்பில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போதே அவர் இந்த கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இதுவரை இலங்கைக்கு சுவிட்சர்லாந்து வழங்கிய உதவிகளுக்கு இதன்போது பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

இலங்கையின், முதலீட்டு மாநாடு விரைவில் சுவிட்சர்லாந்தில் நடத்தப்படும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (இ-3)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிவஶ்ரீ தியாகராஜ சிவஐயர் கிருபாகரன்

(ஆசிரியர் சேவை 16.03.1998-20.01.2017)

(கணக்கு உதவியாளர்.லங்கா சீமெந்து லிமிடெட். காங்கேசன்துறை 01.01.1980-01.03.1998)

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் ஆசிரியராக , பகுதித்தலைவராக , உப அதிபராக, பதில் அதிபர் என பன்முக ஆளுமை கொண்டு கல்விக்காய் சேவையாற்றி 20.01.2017 இன்று ஓய்வு பெறும்

சிவஶ்ரீ தியாகராஜ சிவஐயர் கிருபாகரன்

அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
வலம்புரி நண்பர்கள்



# அரசின் விவசாயத் திட்டங்களை வெளிக்கள உத்தியோகத்தர்களே சிறப்பாகச் செயற்படுத்த முடியும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

நாட்டின் விவசாய உற்பத்திகளை மேம்படுத்தி சுபீட்சமான நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கான அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் மக்கள் மத்தியில் கொண்டு சென்று அவற்றை நடைமுறையில் செயற்படுத்தி வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆற்றல் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கே காணப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களையும் சேர்ந்த அதிகாரிகளின் பங்குபற்றுதலுடனநேற்றுமுன்தினம் மாலை கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

"பேண்தகு அபிவிருத்தியின் குறிக்கோள்களை ஒன்றிணைத்து வெற்றிகொள்வோம் - 2017 ஆம் ஆண்டில் நாட்டிலிருந்து வறுமையை இல்லாதொழிப்போம்." வலிமைமிகு இலங்கையை நோககிய அரசின் பொருளாதார திட்டங்கள் குறித்து அறிவூட்டுவதற்கும், வரட்சி நிலைமைகளின்போதான சவால்களை வெற்றிகொள்வதற்க விவசாயத்துறையினை தயார் செய்வதற்காகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மக்களின் அன்றாட வாழ்க்கையின் சிக்கல்களை நீக்கி, வறுமையை இல்லாதொழித்து அவர்களது பொருளாதாரத்தை உயர்த்துதல் அரசின் நோக்கமாகுமெனவும் அந்தக் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி இதன்போது கருத்து தெரிவித்தார்.

வரட்சியை எதிர்கொண்டு அதன் பாதிப்புக்களை குறைப்பதற்கு புதிய திட்டமொன்றின் கீழ் செயற்பட வேண்டியுள்ளதுடன் வரட்சியை அபிவிருத்தியின் பலமாக மாற்ற வேண்டுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டின் பெரும்போகத்தின் போது இயற்கை அனர்த்தங்களினால் அறுவடைக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு எந்தவிதமான காப்பீடுகளையும் பெற்றுக்கொள்ளாத விவசாயிகளுக்கு விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையினூடாக நட்டஈடு வழங்குதல் ஜனாதிபதியால் அடையாள ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களுக்கு கணனிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் நாட்டிலுள்ள 521 கமநல சேவைகள் நிலையங்களையும் இணைக்கும் தகவல் தரவுத் தொகுதியும் இதன்போது ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைச்சர் துமிந்த திசாநாயக்க, இராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிஹாரே, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோரும் மாகாண விவசாய அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (இ-3)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்
தொ.இ: B/6779

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்; உத்திரட்டாதி
தகைமை/தொழில்:O/L/ கடை
தொ.இ: B/6780

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 43 செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:B.COM/ கணக்காளர்
தொ.இ: B/6781

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 30 சூரிசெவ் 3 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:வங்கியாளர்
தொ.இ: B/6782

**மணமகன் தேவை**

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 34
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/3835

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 19 செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/3837

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 46
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3840

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 24
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MA/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6741

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# சித்தி விநாயகர் காட்டுப்பகுதியில் ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்பு

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தில் உள்ள சித்தி விநாயகர்புரம் காட்டுப்பகுதியில் யுத்தம் இடம் பெற்ற காலப்பகுதியில் புதைக்கப்பட்டது என சந்தேகிக்கப்படும் பாரியளவிலான வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருதாவது,



மன்னார் விமானப் படையின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து விமான படையினரால் மண்ணில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் ஒரு தொகுதி இராணுவ தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடிபொருட்களில், கண்ணி வெடிகள் -10, கைக்குண்டுகள் - 02, தோட்டாக்கள் - 05, மோட்டார் குண்டுகள் உட்பட பல போர்த்தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங்களை செயலிழக்க செய்யும் நடவடிக்கைகளுக்காக, நீதிமன்ற அனுமதியை விமானப்படை அதிகாரிகள் கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்கள். (2-15)

வன்னி வலம்

# முல்லைத்தீவிற்கு 25-ம் திகதி ஜனாதிபதி மைத்திரி வருகை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் மு/ வித்தியானந்தா கல்லூரி தேசிய பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்கவுள்ளதோடு முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி பிணக்குகள் தீர்க்கப்பட்ட ஒரு தொகுதியினருக்கான காணி அனுமதிப் பத்திரங்களை வழங்கி வைக்கவுள்ளதோடு கேப்பாபிலவு பிரதேசத்தில் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருந்த 53 பேருக்குச் சொந்தமான 247 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கேப்பாபிலவு மக்கள் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பல்வேறு போராட்டம், கவனயீர்ப்பு என்பன வற்றை முன்னெடுத்திருந்த நிலையில் ஒரு தொகுதி காணிகள் அன்றைய தினம் ஜனாதிபதியினால் விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-28)

# யாழ்ப்பாணம் கடத்தப்படவிருந்த முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

## கனகராயன்குளம் புதுக்குளப்பகுதியில் சம்பவம்



நெடுங்கேணி வனவளத் திணைக்களத்தினால் சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் கனகராயன்குளம் புதுக்குளப்பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுதொடர்பில் தெரிய வருவதாவது,

பெரியமடு விசேட அதிரடிப்படையின் உதவியுடன் நெடுங்கேணிவனவள திணைக்களமும் இணைந்து கனகராயன்குளம் புதுக்குளப் பகுதியில் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் கொண்டுசெல்ல முற்பட்ட முதிரை மரக்குற்றிகள், பலகைகள் என்பன கூலர் வாகனத்தில் ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்டபோது சுற்றி வளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேகத்தின் பேரில் மூவர் கைதாகினர்.

3 சந்தேக நபர்களும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வாகனமும் மரக்குற்றிகளும் நெடுங்கேணி வனவளத்திணைக்களத்தின் வளாகத்தில் அவர்களின் பாதுகாப்பிலுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# வவு.,மன்னார் பிரதேசங்களில் நாளை மின்சாரம் தடைப்படும்

(வவுனியா)

வவுனியா கிறிட் (Grid) உபமின்நிலையத்தில் செயற்படுத்த வேண்டிய திருத்த வேலை காரணமாக நாளை சனிக்கிழமை வவுனியா பிரதேசத்தில் காலை 9 மணியிலிருந்து காலை 11.30 மணிவரை வவுனியா நகரம், பூங்கா வீதி, புகையிரத நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக்கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக கற்குண்டமடு வரை, மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார்சின்னக்குளம், மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவ புளியங்குளம், பட்டானிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரைக்கும், நேரியகுளத்திலிருந்து செட்டிக்குளம் வரை, வெளிக்குளம், தெற்கிலுப்பைக்குளம், கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, மடுக்கந்தவிலிருந்து துட்டுவாகை வரை, நெடுங்குளம், கருவேலப் புளியங்குளம், மலையா பருதிக்குளம், மாமடுவவிலிருந்து பதவியா வரை, வவுனியா வைத்தியசாலை, வவுனியா இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்றுமுறிப்பு விமானப் படை முகாம், மண்டரின் காமெண்ட்ஸ், Gowloom காமெண்ட்ஸ் இரட்டை பெரிய குளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம், S.V.R அரிசி ஆலை, ஒவியா விடுதி, லங்கா அரிசி ஆலை, குளோப் அரிசி ஆலை, C.E.C கல்லுடைக்கும் ஆலை, மடுக்கந்த தொலைத்தொடர்பு நிலையம், பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, குருமன்காடு UNHCR, அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, செட்டிகுளம் தொலைத்தொடர்பு கோபுரம், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிகுளம் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஆகிய இடங்களிலும்

நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 2.30 மணி வரை வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளத்திலிருந்து பறயனாலங்குளம் வரை, பறயனாலங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து கங்கன்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரை, பிரமனாலங்குளத்திலிருந்து பெரிய தம்பனை வரை, மறக்காரம்பளையிலிருந்து மணிபுரம் வரை, தாண்டிக்குளத்திலிருந்துசின்னவலயாக்கட்டு வரை, வவுனியா புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து புளியங்குளம் வரை, திருநாவற்குளம், சாந்தசோலை, அக்போபுர, கொக்கெலிய, வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம் விமானப் படை முகாம், ஓமந்தை தொழில் நுட்பக்கல்லூரி, ஓமந்தை யூனியன் அலியன்ஸ் லிமிற்றெட், வரன் அரிசி ஆலை, நொதேர்ண் பார்ம், மறக்கறம்பளை பயிற்சிக்கூடம், கொக்கெலிய இராணுவமுகாம், மீன் பிடி வலைத் தொழிற்சாலை, ஓமந்தை AMP Ceylon PVT (LTD) ஆகிய இடங்களிலும்

மன்னார் பிரதேசத்தில் பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, பெரிய பண்டிவிரிச்சானிலிருந்து மடு வரை, தச்சனாமருதமடுவிலிருந்து பள்ளமடுவரை, விடத்தற்தீவிலிருந்து வெள்ளாங்குளம் வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவே மரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டி பாம் கவுஸ், மீன்பிடி சமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

# ஜனாதிபதியின் வருகையால் புதுப்பொலிவு பெறுகிறது வித்தியானந்தா கல்லூரி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வருகையையொட்டி முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/ வித்தியானந்தா கல்லூரி சுத்தப்படுத்தும் மற்றும் அழகுபடுத்தும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பல்வேறு தரப்பினராலும் குறித்த பாடசாலையானது சுத்தப்படுத்தி அழகுபடுத்தப்படுவது அண்மைய நாட்களாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை இக்கல்லூரியில் இடம்பெறும் நிகழ்வில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளதால் அனைத்து தரப்பினராலும் இவ்வாறான சுத்தப்படுத்தும் மற்றும் அழகுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் முன்னாயத்த வேலைகளும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை இக்கல்லூரியின் சுற்றுச்சூழல் மிக நீண்டகாலமாக எவராலும் கவனிப்பாரற்றுக்கிடந்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)



கிளி/கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வு நேற்று பிற்பகல் 2 மணியளவில்- பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது... (படங்கள்:- கிளிநொச்சி செய்தியாளர்)

# திருட்டு மணல் விற்பனை செய்வதை தடுப்பதற்கு ப.நோ.கூ.சங்கங்களின் ஊடாக மணல் விநியோகம்



## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பொதுத் தேவை களுக்கு நிலவும் மணல் தேவையைப் பூர்த்தி செய்யவும் திருட்டு மணல் விற்ப னையை தடுப்பதற்காகவும் விசேட ஒழுங்கமைப்பில் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக மணலை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக கிளி நொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெற்று வரும் மணல் கொள்ளை தொடர்பிலும் மற்றும் மாவட்ட மக்களுக்கும் பொதுத் தேவை களுக்கும் மணலை வழங்குவது




தொடர்பான கலந்துரையாடல் கிளி நொச்சி மாவட்டத்தில் உள்ள கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்ட கலந்து ரையாடல் ஒன்று நேற்று முன் தினம் புதன்கிழமை காலை கிளி நொச்சி மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெற்ற போதே இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத் தில் நிலவும் பல்வேறு பிரச்சினை கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

குறிப்பாக மாவட்டத்தில் இடம் பெறும் வீட்டுத்திட்டங்கள், பொது வேலைத்திட்டங்கள் ஆகியவற்றுக்கு நியாய விலையில் மணலைப் பெற முடியவில்லை. இந் நிலையில் மாவட்டத்தில்திருட்டுத்தனமாக மணல அகழ்வு இடம்பெற்று வருவதோடு, இம் மணலை கொள்ளையர்களிடம அதிக விலைக்கு கொள்வனவு செய்யும் அவலநிலை மாவட்டத் தில் காணப்படுவதாக கலந்துரை யாடலில் கலந்து கொண்டவர்க ளால் அரச அதிபருக்கு சுட்டிக் காட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் ஓர் விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது மக்களின் தேவைக்கு ஏற்ற வகையில், நியாய விலையில் மணலை வழங்குவதன் ஊடாக மக்களுக்கான மணல் தேவை பூர் த்தி செய்யப்படுவதனால் அவர்கள் திரு ட்டு மணலை கொள்வனவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட மாட்டாது.

எனவே, மக்களுக்கு மணலை நியாய விலையில் வழங்கும் நோக் கில் இரு புதிய அனுமதிகளை மாவட்டத்தில் உள்ள இரண்டு ப.நோ.கூ.சங்கங்களிடம் வழங்கு வதற்கு ஏகோபித்த வகையில் தீர் மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு யாட் அனுமதி வழங் கப்படுகின்ற போது மணலிற்கான ஓர் நியாயவிலை நிர்ணயம் செய் யப்பட்டு அதன் அடிப்படையில் விநியோகம் நடைபெறுகின்ற போது மணலினால் ஏற்படும் அதிக பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதோடு ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கும் வாய்ப்பாக அமைந்து அந்த வள ர்ச்சி மாவட்ட மக்களுக்கே மீளவும பயனைக் கொடுக்கும் எனவும் இதன்போது கருத்து தெரிவி க்கப்பட்டுள்ளது. (2-15)

# அரசியலில் பெண் பிரதிநிதிகளின் வீதத்தை அதிகரிக்க விழிப்புணர்வு செயற்றிட்டம்

(மல்லாவி )

இலங்கையின் அரசியல் செய ற்பாடுகளில் பெண் பிரதிநிதி களின் விகிதாசாரத்தை அதிகரி க்கும் வகையில், நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வுச் செயற் றிட்டம் ஒன்றை மாற்றுக் கொள்கை களுக்கான நிலையத்தினால் முன னெடுக்கவுள்ளதாக இலங்கை மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பிரதான நிர்வாகி கலாநிதி. பாக்கிய சோதி - சரவண முத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலா ளருக்கு தெளிவுபடுத்தும் ஊடக வியலாளர் சந்திப்பு பண்டாரநாய க்க மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை நடைபெற்ற போதே, அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எல்லா ஜனநாயக நாடுகளிலும் அரசியலில் பிரவேசிக்கும் பெண்க ளின் எண்ணிக்கை, ஆண்களின் எண்ணிக்கையினை விடக் குறை வானதாகும். அதனால், அநேக மான நாடுகளில் அரசியலில் பெண் களின் சதவீதத்தினை அதிகரிப்ப தற்காக ஒதுக்கீட்டு முறையினைப் பயன்படுத்துகின்றனர்.

இதனடிப்படையில், இலங்கை யில் நடைபெறவிருக்கும் உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் பெண்க ளின் பிரதிநிதித்துவத்தினை அதிகரிப்பது தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டுள் ளது.

இதற்கு அமைவாக நேற்று முன்தினம் புதன்கிழமை தொட க்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வரை இவ் வேலை த்திட்டம் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் 29 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கும் அன்றைய தினம் மல்லாவியில் பிற்பகல் 4 மணி க்கும் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கும் அன்றைய தினம் பிற்ப கல் 4 மணிக்கு பளை பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் பெப்ர வரி மாதம் 2 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 9.30 மணிக்கு பூநகரி பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இதேபோன்று மன்னார் மாவ ட்ட செயலகத்தில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கும் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு தலைமன் னார் பிரதேசச் செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட செயலகத் தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணி க்கும் அன்றைய தினம் பிற்பகல் 4 மணிக்கு நெடுங்கேணி வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான விழிப் புணர்வு செயற்றிட்டம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணி க்கு பருத்தித்துறை பிரதேச செயல கத்திலும் அன்றையதினம் பிற் பகல் 4 மணிக்கு சுன்னாகத்திலும் இதேமாதம் 2 ஆம் திகதி வியா ழக்கிழமை காலை 9.30 மணி க்கு யாழ். மாவட்ட செயலகத்திலும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# காணிகள் துப்புரவு செய்யும் கழிவுகள் வீதியோரங்களில் கொட்டப்படுகின்றன

## பொதுமக்கள் விசனம்



நெடுங்கேணி கீரிசுட்டான் உள் வீதிகள் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளது.

நெடுங்கேணி பிரதேசசபைக்கு சொந்தமான வீதிகள் இரண்டு பக்கங்களும் பற்றை மூடி காண ப்படுவதனால் மக்கள் போக்கு வரத்திற்கு இடையூறாகவுள்ள போதிலும் வீதியருகாமையிலுள்ள காணியுரிமையாளர்களினால் காணிகள் துப்புரவு செய்யும் கழி வுகள் வீதியோரங்களில் போடப் படுவதனால் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாதளவுக்கு காணப் படுகின்றது.

இதனை நெடுங்கேணி பிரதேச சபையினர் இந்த வீதிகளை உரிய முறையில் கவனம் செலுத்தா மையினால் இந்த நிலைக்கு தள்ள ப்பட்டிருப்பதனாலும் கிராம சேவை யாளரும் இந்த விடயங்களில் கவனம் செலுத்தாமல் அதிகாரி களுக்கு தெரியப்படுத்தாத காரண த்தினால் மக்கள் கழிவுகளை வீதியோரத்தில் கொட்டுவதனால் போக்குவரத்திற்கு நெரிசல் ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக சிறுவர் தொடக்கம் முதியோர் வரை வீதி விபத்துக்களை சந்தித்த வண்ணம் உள்ளார்கள். இதனை சம்பந்த ப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு போக்குவரத்திற்கு ஏற்ற படி இவ்வீதிகளை ஏற்படுத்தி தரும்படி மக்கள் கோரிக்கை விடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.(2-15)





கிளி/ முருகானந்தா கல்லூரியின் சாரணர்களால் சாரணிய பொங்கல் விழா நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் கல்லூரி அதிபர் ச.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது...

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...


# எனக்கு நீலம் தான் விருப்பம்... தங்களுக்கு...?

## நிறங்களும் அவற்றின் குணங்களும்

உலகம் வர்ணமயமானது. நாம் அன்றாடம் உண்ணும் உணவு முதல் உடுத்தும் உடை வரை எல்லாவற்றிலும் ஏராளமான வர்ணங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வர்ணத்திற்கும் ஒரு குணமுண்டு. வெண்மை தூய்மையையும், சிவப்பு தடையையும் உணர்த்துவது இயல்பு. பொதுவாக அடிப்படை நிறம் என்பது நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய மூன்றே. வெண்மை மற்றும் கருமை நிறத்தைத் தனியாகவே குறிப்பிடுகின்றனர். மற்ற வர்ணங்கள் அனைத்தும் இவற்றின் கலப்பினாலேயே உண்டாகின்றன. ஒவ்வொரு வர்ணத்திற்கும் நம் வாழ்வில் ஒரு பங்கு உள்ளது.

உள்வியலில் நிறங்கள் முக்கியபங்கு வகிக்கின்றன.இந்த வர்ணங்கள் நமது எண்ணங்களிலும் ஆதிக்கம் செலுத்தக்கூடியவை என்பதும் ஒருவர் விரும்பும் நிறத்தைக்கொண்டே அவர்கள் குணத்தையும் கணிக்க இயலும் என்பதும் உளவியலாளர்களின் கருத்து. உளவியலில், சிவப்பு, பச்சை, நீலம் மற்றும் மஞ்சளை அடிப்படை நிறங்கள் என்று சொல்லப்படுகிறது. நம்மீது தாக்கத்தை உண்டாக்கக்கூடிய நிறங்களாக அடிப்படை நிறங்களான மேற்கூறிய சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் இவற்றுடன் வெண்மை, கருமை, சாம்பல் நிறம்(Grey), ஒரேஞ், ஊதா,இளஞ்சிவப்பு(Pink) மற்றும் பழுப்பு(Brown) நிறங்கள் குறிப்பிடப்படுகின்றன.

வலிமையின் நிறம் சிவப்பு: வறுமையின் நிறம் சிவப்பா என்று நமக்குத் தெரியாது. ஆனால் வலிமையின் நிறம் சிவப்புத்தான். ஆம், சிவப்பு வலிமையையும் துணிச்சலையும் ஆண்மை, ஆற்றல் ஆகியவற்றையும் குறிக்கும் நிறமாகக் கருதப்படுகிறது. தூண்டுதலை உண்டாக்குகிறது. ஒரு அறையில் உள்ள பொருட்களில் சிவப்பு வர்ணப் பொருள்தான் நமது கவனத்தினை முதலில் ஈர்க்கிறது. எனவேதான் போக்குவரத்து சைகைகள், அபாய எச்சரிக்கைகள்




முதலியவை சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துகின்றன. 'செய் அல்லது செத்து மடி' என்ற உணர்வை உண்டாக்குவதும் நேரம் வேகமாக ஓடுவது போன்ற உணர்வைத் தோற்றுவிப்பதும் சிவப்பின் பிற தன்மைகள்.

பச்சை நிறம் பொதுவாக சமநிலையையும் சூழலில் அமைதி நிலவுவதையும் குறிக்கிறது. பச்சை நிறத்தினைப் பார்க்கும்பொழுது நமது மனம் புத்துணர்ச்சி அடைகிறது. கண்களில் உள்ள கண்வில்லை நாம் பார்க்கும் ஒவ்வொரு நிறத்தின் அலைவரிசைக்கும் ஏற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ளுகிறது. ஆனால், பச்சை நிறத்திற்கு அப்படிப்பட்ட தகவமைப்பு ஏதும் தேவையில்லை. வானவில்லின் நடுவில் அமைந்துள்ள இந்நிறமானது சமநிலையைச் சுட்டுகிறது. ஓய்வு நிலையையும் செழிப்பையும் குறிக்கவும் பச்சை பயன்படுகிறது.

நீல நிறம், குளிர்ந்த நிறமாகக் கருதப்படுகிறது. அறிவுத்திறனையும் நம்பிக்கையையும் திறமையான தர்க்க ரீதியான செயற்பாட்டையும் குறிப்பிடுகிறது. நீல நிறம் மனதிற்கு இதமளிக்கக் கூடியதாகக் கருதப்படு கிறது. ஆழ்ந்த நீல நிறம், எண்ண ஓட்டங்களைச் சீராக்கி சிந்திக்கும் திறனை உயர்த்துகிறது.

இள நீலமானது, மனதை அமைதிப்படுத்தி ஒருமுகப்படுத்துகிறது. அதிக அலை நீளமுள்ள நிறமாதலால், தொலைவில் உள்ள நீல நிறப்பொருட்கள் நம் கண்ணில் படுவதில்லை. இதனால்தான் போக்குவரத்து விளக்குகள் நீல நிறத்தைப் பயன்படுத்துவதில்லை. அதே அதிக அலை நீளம்தான் வானத்தை நீல நிறமாகத் தோன்றச் செய்யவும் காரணம். உலகம் முழுவதும் அதிக அளவிலான மக்கள் நீல நிறத்தை விரும்புவதாக ஆய்வுகள் கணிக்கின்றன.

ஊதா ஆன்மீக உணர்வுடன் தொடர்புடையதாகக் கருதப்படுப்படுகிறது. இந்நிறம் நிறைவு, சொகுசு, தரம் ஆகியவற்றைக் குறிப்பதாகவும் விளங்குகிறது. ஊதா நிறம் ஆழ்நிலை தியானத்திற்கு உதவுகிறது. ஆன்மீக உணர்வைத் தூண்டக்கூடிய இந்நிறம் சீரான சிந்தனையையும் ஆழ்ந்த எண்ணங்களையும் ஊக்குவிக்கிறது.வானவில் லின் புறத்தில் கடைசியாக இருக்கும் நிறமாதலால், காலம் (Time), வெளி (Space) மற்றும் பிரபஞ்சம் (Cosmos) இவற்றுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. அதே சமயம் அதிகப்படியான ஊதாநிறப் பயன்பாடு தாழ்வு மனப்பான்மை, அழுத்தம், வெளிப்படையாகப் பேசாமை போன்றவற்றை ஏற்படுத்தக் கூடியது. அதே போல் சரியான வர்ணக்கலவையாக இல்லாவிடில் அது அருவருக்கத் தக்கதாகத் தோற்றமளிக்கிறது.

ஆர்வம் தரும் ஒரேஞ்: செயற்பாட்டைத் தூண்டக் கூடிய வர்ண்ணம் ஒரேஞ். வளமை, பாதுகாப்பு, ஆர்வம், கதகதப்பு, வேடிக்கை ஆகியவற்றின் குறியீடு எனவும் ஒரேஞ் வர்ணம் கருதப்படுகிறது. சிவப்பு மற்றும் மஞ்சள் வர்ணத்தின் கலவையால் ஒரேஞ் உருவாவதால், செயற்றிறன், உணர்வுகள் இரண்டையும் தூண்டும் தன்மையுடையதாக உள்ளது இந்த வர்ணம். மனம் மிகுந்த சோர்வாக இருக்கும்பொழுது ஒரேஞ் வர்ண உடை அணிவதால் மனச்சோர்வில் இருந்து விடுபட இயலும். அதே நேரம், இவ்வர்ணத்தை கறுப்புடன் சேர்த்துப் பயன்படுத்துகையில் இது எதையோ இழந்தது போன்ற உணர்வைத் தோற்றுவிப்பதாக மாறிவிடுகிறது. மேலும் அதிகப்படியான ஒரேஞ் வர்ணம், அறிவீனத்தைக் (நீலத்திற்கு எதிரான தன்மை) காட்டுகிறது.

மஞ்சள் உணர்வு பூர்வமான நிறம். தன்னம்பிக்கை, ஆக்க பூர்வ சிந்தனைகள், நட்புணர்வு, நேர்மறைச் சிந்தனை ஆகியவற்றின் குறியீடாகக் கருதப்படுகிறது. சிவப்பு நிறம் போலவே வலிமையையும் உணர்வுகளின் தூண்டுதலையும் கூட்டுவது மஞ்சளின் தன்மை. உத்வேகத்தை அதிகரிப்பதோடு நேர்மறை உணர்வுகளை ஏற்படுத்த வல்லது. ஆனால் அளவுக்கதிகமான மஞ்சள் நிறம் அல்லது தவறான வர்ணங்களுடன் மஞ்சளின் இணைப்பு எதிரான பலனைத் தரக்கூடியது.

அது நமது சுய மதிப்பைக் குறைக்கின்ற அல்லது பதற்றத்தையும் பயத்தையும் உண்டாக்கும் காரணியாகி விடுகிறது.

உளவியலில் அடிப்படை நிறங்கள் பதினொன்று எனவும், அவற்றுள் பச்சை, சிவப்பு, ஊதா, நீலம்,ஒரேஞ் மற்றும் மஞ்சளின் குணங்களையும் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக அடுத்த ஐந்து நிறங்களான கறுப்பு, வெண்மை, இளஞ்சிவப்பு (ரோஜா நிறம்), பழுப்பு மற்றும் சாம்பல் நிறத்தின் தன்மைகளை இங்கு காணலாம்.

இளஞ்சிவப்பு: அன்பு, அரவணைப்பு, காதல், பெண்மை, மென்மை ஆகியவற்றினைக் குறிக்கும் கதகதப்பான வர்ணம் ரோஜா நிறமாகும். இது சிவப்பில் இருந்து உருவான சிவப்பின் அடிப்படையிலான நிறமே.

ஆனாலும் சிவப்பு உணர்வுகளைத் தூண்டுவதற்கு உதவுவது. இந்நிறமோ உணர்வுகளை வருடிக்கொடுத்து இதமான ஒரு உணர்ச்சியைத் தோற்றுவிக்கிறது. இது பெண்மையையும் உயிர்களின் வாழும் தன்மையையும் குறிக்கிறது. இதனாலேயே பெண்கள் அதிகப்படியாக இளஞ்சிவப்பு நிறத்தை விரும்புகின்றனர்.

இந்நிறம் அரவணைப்பான, இதமான உணர்வையும் உண்டாக்குகிறது.

காதல் உணர்வைத் தூண்டுகிறது. எனவேதான், இவ்வர்ணத்தைப் படுக்கையறையில் பயன்படுத்துமாறு உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகில் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பெண்களின் மிக விருப்பமான வர்ணமாக இது தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளது.

ஆயினும், இதன் குறைபாடு என்னவெனில் அதிக அளவு இளஞ்சிவப்பு வர்ணம் பயன்படுத்தப்படுமாயின் அது மனச்சோர்வையும் பலவீனமான உணர்வையும் உருவாக்குவதோடு நம் ஆற்றலை, திறனைக் குறைத்துவிடக் கூடியதாகிறது.

காலிங்கராசா ஹரிச்சந்திரா
தொழில்நுட்ப அலுவலர்,
மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை,
விஞ்ஞானபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 178

நீர் (water)அதன் அதிக அடர்த்தியைக் கொள்ளும் வெப்பநிலை எது?

புதிர் 178 இற்கான விடைகளை 30.01.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் வீசன்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 177 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

கே.இராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி
வட்டுக்கோட்டை.

**புதிர் 177க்கான கேள்வியும் விடையும்:**


சமீபத்தில் எந்த எண்ணெய் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் பிரிட்டிஷ் பெற்றோலியத்தின் (BP)மிகப்பெரிய பங்குதாரராக மாறியுள்ளது?

அபுதாபி(Abu Dhabi) எண்ணெய் நிறுவனம்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 178

சரியான விடை:-...........................................
முழுப்பெயர்:-...........................................
முகவரி:-...........................................
தொ.பே. இல:...........................................
கையொப்பம்:...........................................

# ஜல்லிக்கட்டு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது



## தமிழக முதலமைச்சருக்கு பிரதமர் மோடி பதில்

ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வத்திடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜல்லிக்கட்டு நடத்தக் கோரியும், பீட்டாவுக்கு தடை விதிக்கக் கோரியும் தமிழகம் முழுவதும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.


இதனையடுத்து டில்லி சென்ற தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பின்போது ஜல்லிக்கட்டு நடத்த அவசரச் சட்டம் இயற்றக்கோரி முதல்வர் வலியுறுத்தினார். தமிழகம் முழுவதும் நடைபெற்றுவரும் போராட்டங்கள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார். மேலும், வறட்சி பாதிப்பு குறித்தும் பிரதமருடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்நிலையில், பிரதமர் அலுவலகத்தின் டுவிட்டர் பக்கத்தில் பிரதமரின் நிலைப்பாடு தொடர்பாக டுவிட்கள் வெளியாகியிருக்கின்றன. அந்த டுவிட்டர் பக்கத்தில், “ஜல்லிக்கட்டு விளையாட்டின் கலாசார முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள முடிகிறது. இருப்பினும், தற்சமயம் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. ஜல்லிக்கட்டு தொடர்பாக மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசு உதவியாக இருக்கும்" என பிரதமர் தமிழக முதல்வரிடம் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுதவிர வறட்சி பாதிப்பை சமாளிக்க தேவையான, உதவிகளை மத்திய அரசு தமிழக அரசுக்கு செய்யும் என பிரதமர் உறுதியளித்துள்ளதாகவும் அந்த டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வறட்சி பாதிப்புகளை ஆய்வு செய்ய வெகுவிரையில் மத்திய குழு ஒன்று தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# சோமாலியாவில் கடும் வரட்சி
# ஆபத்தில் 4 மில்லியன் மக்கள்



சோமாலியாவில் நிலவி வருகின்ற மிகவும் மோசமான வறட்சியால் சுமார் 4 மில்லியன் மக்களின் வாழ்க்கை ஆபத்திற்கு உள்ளாகி இருப்பதாக ஐ.நா. மனிதநேய அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த பிரச்சினையை சமாளிக்க 850 மில்லியன் டொலர்களுக்கு மேலாக தேவைப்படுவதாக மனிதநேய விவகார பணிகளின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அடுத்தடுத்து பருவமழை அங்கு பொய்த்து போனதாலும், சில சமூகங்கள் இடம் பெயரவும், சேவைகள் வழங்குவதை பாதிக்கவும் செய்த மோதல்களாலும் அங்கு மனித நேய சூழ்நிலை மோசமாகியுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பஞ்சத்தால் சோமாலியாவில் இரண்டு இலட்சத்து 60 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

ஆரம்ப கட்டத்திலேயே நடவடிக்கை எடுப்பதே இன்னொரு பேரழிவை முறியடிக்கவும் படிப்பினைகள் பெறப்பட்டுவிட்டன என்பதைக் காட்டவும் உள்ள ஒரே வழி என்று சோமாலியாவுக்கான ஐ.நா. உதவியின் சிறப்பு பிரதிநிதி பெய்றர் டி கிளேர்க் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுரங்கப் பாதையில் குண்டு வெடித்தது
## 8 இராணுவத்தினர் பலி



சிரியாவில் நடைபெற்ற சுரங்கப் பாதை குண்டு வெடிப்பு தாக்குதல் சம்பவத்தில் 8 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸ்"க்கு வெளியே சுரங்கப் பாதையில் வெடிகுண்டு வெடிப்பு தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த சம்பவத்தில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேலும் சிரிய அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

சிரிய கண்காணிப்புக் குழு இந்த தகவலை தெரிவித்துள்ளது. டமாஸ்கஸின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஹரஸ்தா பகுதியில் கிளர்ச்சியாளர்கள் வெடிகுண்டுகளை, நேற்று முன்தினம் வைத்துள்ளனர்.

இது குறித்து கண்காணிப்பு குழுவின் தலைவர் ரமி அப்தெல் ரஹ்மான் கூறுகையில், ஹரஸ்தா மோட்டார் வாகனங்கள் மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த பலரும் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதனால் பலி எண்ணிக்கை கூடும் என்று அஞ்சப்படுகிறது என்றார்.

இந்த வெடிகுண்டு தாக்குதல் சம்பவம் குறித்து சிரிய அரசின் ஊடகங்கள் உடனடியாக செய்தி எதுவும் வெளியிடவில்லை.

செவ்வாய்க்கிழமை அரசு ஆதரவு படைகள் கிழக்கு கவுடா பகுதியில் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து 10இற்கும் மேற்பட்ட பண்ணைகளை கைப்பற்றினர். கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் இருந்த ஹரஸ்தா பகுதியில் அரசு படைகள் ரொக்கெட் தாக்குதலிலும் ஈடுபட்டனர்.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் உள்நாட்டு போரில் இதுவரை 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜல்லிக்கட்டு;நல்ல தீர்ப்பு வரும் அமைச்சர் ஜவடேகர் நம்பிக்கை

ஜல்லிக்கட்டு பற்றி உச்ச நீதிமன்றில் நல்ல தீர்ப்பு வரும் என மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழர்களின் வீர விளையாட்டு ஜல்லிக்கட்டு. ஆனால் ஜல்லிக்கட்டு காளைகளை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் காட்சிப்படுத்தும் விலங்குகள் பட்டியலில் 2011ஆம் ஆண்டு சேர்த்தது. 2014ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றில் தடை விதித்தது. அதைத் தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடக்கவில்லை. 2016 ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டு நடைபெற ஏதுவாக கட்டுப்பாடுகளுடன் கூடிய அனுமதியை மத்திய அரசு வழங்கி அறிக்கை வெளியிட்டது.

குறிப்பாக, ஜல்லிக்கட்டு நடத்தப்படுகிறபோது காளைகள் 15 மீற்றர் சுற்றளவுக்குள் பிடிபடவேண்டும், போட்டிகளை நடத்துவதற்கு முன்பு விலங்குகள் நலத்துறையினரால் காளைகளை பரிசோதிக்க வேண்டும், அவற்றுக்கு மருந்துகள் செலுத்தப்பட்டுள்ளதா? என கண்டறிய வேண்டும், பிராணிகள் வதைக்கு எதிரான மாவட்ட கமிட்டியும், மாவட்ட விலங்குகள் நல வாரியமும் கண்காணிக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தது. ஆனாலும் அந்த அறிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 'பீட்டா' அமைப்பு வழக்கு தொடுத்ததால் ஜல்லிக்கட்டு நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத அளவில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், 'பீட்டா'வுக்கு எதிராகவும் போராட்டங்கள் வெடித்துள்ளன.

இதுபற்றி டில்லியில், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை முன்னாள் அமைச்சரும் தற்போதைய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சருமான பிரகாஷ் ஜவடேகரிடம் நிருபர்கள் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜல்லிக்கட்டைப் பொறுத்தமட்டில், நான் மத்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சர் பதவி வகித்தபோது, நாங்கள் அறிக்கை வெளியிட்டோம். அதை உச்ச நீதிமன்று இரத்து செய்து விடவில்லை.

ஆனால் அந்த அறிக்கையை செயற்படுத்துவதற்குத்தான் உச்ச நீதிமன்று இடைக்கால தடை உத்தரவு போட்டுள்ளது. அது தொடர்பான வழக்கு முடிவுக்கு வரும்போது, மத்திய அரசின் அறிக்கையானது சட்டத்தின் பரிசீலனையில் நிலைத்து நின்று, செல்லுபடியாகும், நல்ல தீர்ப்பு வரும் என உறுதியாக சொல்கிறேன்.

நான் மிகவும் உறுதியாக சொல்வதற்கு காரணம், அந்த அறிக்கையில் காளைகளின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. பாரம்பரியம் காக்கப்படுகிற வகையில் அந்த விளையாட்டுக்கு அனுமதியும் அளிக்கப்பட்டது. அது ஒரு சீரான அறிக்கையாகும். நீதிமன்று என்ன முடிவு எடுக்கிறது என்பதை பொறுத்திருந்து பாரப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அகதிகள் முகாம் மீது இராணுவ விமானம் தவறுதலாக தாக்குதல் 100 பேர் உயிரிழப்பு



நைஜீரியாவில் அகதிகள் முகாம் மீது இராணுவ ஜெட் விமானம்தவறுதலாக குண்டு வீசியதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் போகோஹராம் தீவிரவாதிகள் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த போகோஹராம் தீவிரவாதிகளுக்கு எதிராக நைஜீரியா இராணுவம் பல்வேறுகட்டபதில் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

இந்நிலையில், நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள ரான் பகுதியில் அகதிகள் முகாம் மீது இராணுவ விமானப் படையை சேர்ந்த ஜெட் விமானம் தவறுதலாக குண்டு வீச்சை நடத்தியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் உயிரிழந்தனர். பலர் காயம் அடைந்தனர்.

தாக்குதலுக்கு ஆளானவர்களில் முகாமில் சேவை செய்து கொண்டிருந்த வைத்தியர்கள் மற்றும் வைத்தியர் நல உதவியாளர்களும் அடங்குவர்.

இராணுவ கமாண்டர் மேஜர் ஜெனரல் லக்கி இரப்பார் இந்த சம்பவத்தை உறுதி செய்துள்ளார். கமரூனுக்கு எல்லைப் பகுதியில் சுமார் நூற்று ஐம்பது கிலோ மீற்றர் தொலையில் இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இதனையடுத்து குண்டு வீச்சு தாக்குதலுக்கு ஆளான முகாம் பகுதியில் அரசு தரப்பினர் விரைந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். நைஜீரிய அரசு தரப்பில் நடந்துள்ள மிகப்பெரிய முதல் தவறுதல் இது என்று கருதப்படுகிறது. (இ-7)

# போர்க்களமானது அலங்காநல்லூர்

## 4–வது நாளாக இளைஞர்கள், பெண்கள் தொடர் போராட்டம்



வாடிவாசல் திறக்காத வரை வீட்டிற்கு செல்ல மாட்டோம் என அலங்காநல்லூரில் 4-வது நாளாக நேற்றும் போராட்டத்தை தொடர்ந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

உச்சநீதிமன்ற தடை காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக நடைபெறாத ஜல்லிக்கட்டு இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது நிச்சயம் நடைபெறும் என எதிர்பார்த்து இருந் தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இதனால் வெகுண் டெழுந்த காளை வளர்ப்போர், மாடுபிடி வீரர்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் தடையை மீறி ஜல்லிக்கட்டை நடத்த திட்டமிட்டனர். இவர்களுக்கு தமிழகம் முழுவதும் உள்ள இளைஞர்கள், மாணவர்கள் ஆதரவு கரம் நீட்டினர்.

கடந்த 15, 16ஆம் திகதிகளில் தடையை மீறி அலங்கா நல்லூர், பாலமேடு பகுதிகளில் தடையை மீறி காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. இந்தச் சூழலில் அலங்காநல்லூருக்கு வெளி மாவட்ட இளைஞர்கள், கல்லூரி மாணவர்கள் 16ஆம் திகதி திரண்டு வந்தனர்.

வாடிவாசல் முன்பு குவிந்த அவர்கள் அங்கு தர்ணா போராட்டத்தை தொடங்கினர். காளைகளை வாடிவாசல் வழியாக அவிழ்த்துவிட வேண்டும். அதுவரை நாங்கள் கலைந்து செல்லமாட்டோம் என்று அவர்கள் அறிவித்தனர். இரவிலும் போராட்டத்தை தொடர்ந்த அவர்களை மறுநாள் காலை பொலிஸார் கைது செய்தனர். இதன் காரணமாக போராட்டக் களம் மேலும் தீவிரம் அடைந்தது.

அலங்காநல்லூர் செல்லும் சாலையில் கைதான வர்களுக்கு ஆதரவாக கிராம மக்கள், காளை வளர்ப் போர, மாடுபிடி வீரர்கள், ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் என ஏராளமானோர் திரண்டு மறியலில் ஈடுபட்டனர்.

இதற்கிடையில் கைதாகி திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் வீட்டிற்கு செல்லாமல் அலங்காநல்லூர் போராட்ட களத்திற்கே சென்றனர். கொட்டும் பனியை பொருட்படுத்தாமல் கடந்த 3 நாட்களாக சாலையிலேயே படுத்து உறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று வியாழக்கிழமை 4-வது நாளாக அவர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்தனர்.

இந்த போராட்டத்தில் ஏராளமான பெண்கள் குழந்தைகளுடன் கலந்து கொண்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கூறும்போது, வாடிவாசலில் காளைகளை அவிழ்த்துவிடும் வரை எங்களது போராட்டம் தொடரும். அதுவரை வீட்டிற்கு செல்ல மாட்டோம். தொடர்ந்து இங்கேயே இருப்போம்.

ஜல்லிக்கட்டுக்கான தடை நீக்கப்படாவிட்டால், தமிழக எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் இராஜினாமா செய்ய வேண்டும். அப்படி செய்தால் நாங்கள் போராட்டங்களை நிறுத்திக்கொள்கிறோம் என்றனர்.

போராட்டக்களத்தில் இருப்பவர்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், இளைஞர் அமைப்புகள் உணவு வழங்கி வருகின்றன. அப்போது வெளிநாட்டு குளிர் பானங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் அதனை வாங்க இளைஞர்கள் மறுத்து விட்டனர்.


ஜல்லிக்கட்டு தடைக்கு காரணமே வெளிநாட்டு அமைப்பான பீட்டாதான் என தெரிவித்த இளைஞர்கள் அந்த அமைப்பை உடனடியாக தடை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்தப் போராட்டம் காரணமாக அலங்காநல்லூருக்கு பேருந்து போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

வாடிவாசல் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டுள்ளது.

அலங்காநல்லூரில் போராட்டம் வலுத்துள்ளதால் கடந்த 3 நாட்களாக கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. நேற்று 4 ஆவது நாளாகவும் அதே நிலை நீடித்தது. (இ-7)

# பிரதமர் மோடியைச் சந்தித்தார் தமிழக முதல்வர் பன்னீர்செல்வம்







தமிழகத்தில் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தமிழகமெங்கும் போராட்டங்கள் நடந்துவரும் நிலையில், ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடியை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து மனு அளித்துள்ளார்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு மீதான தடையை விலக்கக் கோரியும், பீட்டா அமைப்பிற்கு தடைவிதிக்கக் கோரியும கடந்த சில தினங்களாக மாநிலத்திலுள்ள பல மாவட்டங்களில் போராட்டம் நடந்து வருகிறது.

நான்கு தினங்களுக்கு முன்பு அலங்கா நல்லூரில் வாடிவாசல் அருகே ஜல்லிக்கட்டு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அலங்காநல்லூரில் தொடங்கிய போராட்டமானது தற்போது தமிழகம் முழுக்க பரவிய நிலையில் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையிலிருந்து டில்லி புறப்பட்ட தமிழக முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் டில்லியில் உள்ள தமிழக அரசின் இல்லத்தில் தங்கினார்.

நேற்று முற்பகல் 10.30 மணிக்கு தமிழக அரசின் இல்லத்திலிருந்து புறப்பட்ட ஓ.பன்னீர்செல்வம் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார்.

அதற்குமுன், தமிழக அரசினர் இல்லத்திற்கு வெளியே ஜல்லிக்கட்டு ஆதரவாளர்கள் பலர் கைகளில் பதாகைகளுடன் குவிந்து ஜல்லிக்கட்டு ஆதரவு கோஷங்களை எழுப்பினர்.

ஜல்லிக்கட்டு நடத்தக் கோரி தமிழகத்தில் வலுத்து வரும் போராட்டங்கள் குறித்து பிரதமரிடம் முதல்வர் விளக்கிக் கூறியதாக அ.தி.மு.கவின் அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஜல்லிக்கட் போராட்டங்

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகளில் தமிழர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அரசு அவசர சட்டம் கொண்டு வரக்கோரி தமிழகம் முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் தீவிர போராட்டத்தில் குதித்து உள்ளனர்.


சமூக ஊடகங்கள் மூலம் தமிழக இளைஞர்கள் ஜல்லிக்கட்டு நடத்த ஆதரவு அளிக்கும்படி உலக நாடுகளில் வசிக்கும் தமிழர்களை கேட்டுக் கொண்டதால் இந்த போராட்டம் தற்போது ஏனைய நாடுகளுக்கும் பரவி உள்ளது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் மற்றும் தமிழ் சங்கங்கள் அங்குள்ள மக்களிடம் ஜல்லிக்கட்டு குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை தொடங்கி போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின் றன.

இதுபோன்ற போராட்டங்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, ரஷ்யா,

சீனா, கனடா,
ந்து, மலேசியா,
ஐக்கிய அரபு எ
நாடுகளில் நடந்
அமெரிக்கா
வசிக்கும் நியு
வோஷிங்டன்,
மினசோட்டா,
டெக்சாஸ், கலி
மேரிலாண்ட் அ
மாலை நேரத்
கட்டுக்கு ஆதர
போராட்டத்தி
உரக்க எழுப்பின
'ஜல்லிக்கட்
ளுக்கு ஜல்லிக்
பதாகைகளையு
னர். பீட்டா அ
கங்களை எழுப்
தற்போது
ங்களில் குளிர்
போதிலும் அந்த
ஏராளமானோ
போராட்டத்தில்
அட்லாண்ட
பஸ், சியாட்டில்,
னியோ, பால்
சான்பிரான் சி
ங்களில் நடந்த
லும் 250 முதல
கள் தங்களது கு
ஜல்லிக்கட்டுக்

# படையெடுக்கு தமிழகத்தில்





ஜல்லிக்கட்டு நடைபெற வலியுறுத்தி தமிழகம் முழுவதும் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

பொங்கலுக்குள் ஜல்லிக்கட்டு நடைபெற அனுமதி கிடைத்து விடும் என்று அனைத்து தரப்பு

மக்களும்
ந்தனர். அ
லும் அ
தொடர்ச்சி
வந்தது.
ஆனா
லிக்கட்டு
காத நி

# கட்டுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் ட்டங்களில் ஈடுபட்டுள்ள தமிழர்கள்



னா, கனடா, சுவிட்சர்லாந்து, அயர்லா து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, ங்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பல ாடுகளில் நடந்தன.

அமெரிக்காவில் தமிழர்கள் அதிகம் சிக்கும் நியூயோர்க், ஜோர்ஜியா, வாஷிங்டன், நியூஜெர்சி, மிச்சிகன், னசோட்டா, ஓகியோ, நெப்ராஸ்கா, டக்சாஸ், கலிபோர்னியா, கனெக்டிகட், மரிலாண்ட் ஆகிய மாகாணங் களில் ாலை நேரத்தில் திரண்டு ஜல்லிக் ட்டுக்கு ஆதரவான கோஷங்களை பாராட்டத்தில் ஈடுபட்ட தமிழர்கள் ரக்க எழுப்பினர்.

'ஜல்லிக்கட்டை காப்போம்', 'எங்க நக்கு ஜல்லிக்கட்டு வேண்டும்' என்ற தாகைகளையும் அவர்கள் ஏந்தி இருந்த ர். பீட்டா அமைப்பை கண்டித்தும் முழக் ங்களை எழுப்பினர்.

தற்போது அமெரிக்காவின் பல மாகாண களில் குளிர் கடுமையாக இருக்கிறது. இருந்த பாதிலும் அந்த குளிரையும் பொருட்படுத்தாமல் ராளமானோர் சாலை ஓரங்களில் நின்று பாராட்டத்தில் ஈடுபட்டனர்.

அட்லாண்டா, டல்லாஸ், டெட்ராய்ட், கொலம் ஸ், சியாட்டில், தெற்கு ஆஸ்டின், சான் அண் டோ ரியோ, பால்டிமோர், மின் னியாபொலிஸ், ான்பிரான் சிஸ்கோ உட்பட பல்வேறு நகர களில் நடந்த போராட்டங்கள் ஒவ்வொன்றி லும் 250 முதல் 500-க்கும் மேற் பட்ட தமிழர் ள் தங்களது குழந்தைகளுடன் கலந்து கொணடு ல்லிக்கட்டுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர்.

இவர்களில் பலர் தமிழர்களின் பாரம்பரிய வேட்டி அணிந்தும் வந்திருந்தனர். டல்லாஸ் நகர தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

அட்லாண்டா நகரில் தமிழர்கள் குடும்பமாக திரண்டு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் இந்திய தூதரக அதிகாரி நாகேஷ் சிங்கை சந்தித்து, ஜல்லிக்கட்டு மீதான தடையை நீக்கக்கோரி பிரதமர் மோடிக்கு மனுவும் கொடுத்தனர்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்திலும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதேபோல் தென் ஆபிரிக்காவின் டர்பன், அவுஸ்திரேலியாவின் மெல் பேர்ன், அயர்லாந்தின் டப்ளின், மலேசிய தலைநகர் கோலாலம்பூர், சிங்கப்பூர், இலங் கையின் யாழ்ப்பாணம் நகரங்களிலும் ஏராளமான தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராட்டத்தில்ஈடுபட்டனரை.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோவில் முன்பாக நேற்று முன்தினம் மாலை திரண்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பினர்.

முக்கிய நாடுகள் பல வற்றில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக தமிழர்கள் நடத்தி வரும போராட்டம் காரணமாக இப்பிரச்சினை தற்போது உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து இருக்கிறது. (இ-7)

# டுக்கும் இளைஞர்கள் கூட்டம்; தில் வெடித்தது அறவழிப்புரட்சி







மக்களும் நம்பிக் கொண்டிருந்தனர். அரசியல் வாதிகள் தரப்பிலும் அப்படி ஒரு வாக்குறுதி தொடர்ச்சியாக கொடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் பொங்கலுக்குள் ஜல்லிக்கட்டுக்கு அனுமதி கிடைக்காத நிலையில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்த தொடங்கினர். அலங்காநல்லூரில் தொடங்கிய இந்த போராட்டம் மாநிலம் முழுவதும் பரவியது.

குறிப்பாக சென்னை மெரினா கடற்கரையில் சில நூறு மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மட்டுமே தொடங்கிய போராட்டமானது பெரிய புரட்சியாக தற்போது உருமாறி யுள்ளது.

பல்வேறு இடங்களில் இருந்து கட்டுக்கடங்காத கூட்டம் மெரினாவைநோக்கிவந்துகொண்டே இருக்கிறது. இளைஞர்கள் மட்டுமல்லாமல் பெண்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் என பல் வேறு தரப்பினரும் மெரினாவில் குவிந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி மெரினாவில் சுமார் 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கூடி உள்ளதாக தகவல்கள தெரிவிக்கின்றன.

மதுரை அலங்கா நல்லூரிலும் 4 ஆவது நாளாக நேற்று போராட்டம் வலுவாக நடை பெற்றது.

அதே போல் நேற்று முன்தினம் இரவு மதுரை தமுக்கம் மைதானத்தில் போராட்டம் தொடங்கியுள்ளது. இதில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொணடுள்ளனர்.

அதேபோல் நெல்லை வா. உ.சி .மைதானத்தில் போராட்டம் நடைபெற்று வருகிறது. கோவை, திருச்சி என தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் போராட்டம் தீயாக பரவி வருகிறது.

இதனால் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மட்டுமே முன்னெடுத்த ஜல்லிக்கட்டு போராட்டம் மக்கள் போராட்டமாக வெடிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

தமிழகத்தை போல் புதுச்சேரியிலும் கடந்த 3 நாட்களாக போராட்டம் நடைபெற்று வருகிறது. தமிழகத்தை கடந்து இந்தி யாவில் டில்லி, பெங்களூர் ஆகிய நகரங்களிலும் போராட்டம் நடைபெற்று வருகிறது.(இ-7)

# ஜல்லிக்கட்டு தடையை நீக்க மத்திய அரசை நெருக்குங்கள்

சில ஆண்டுகளாகவே பொங்கல் பண்டிகை நெருங்கும் போதெல்லாம் பரபரப்பில் தள்ளப்படுகிறது தமிழகம். கிராமப்புறங்களில் உழவர் திருநாளான பொங்கல் பண்டிகைக்கான வழமையான உற்சாகத்துக்குப் பதில், ஜல்லிக்கட்டை முன்வைத்த சர்ச்சைகள், போராட்டங்கள் அந்த இடத்தை நிரப்பி வருகின்றன. இந்த ஆண்டில் போராட்டங்கள் உச்சம் தொட்டிருக்கின்றன. தலைநகர் சென்னையில் தொடங்கி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள் தன்னெழுச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள். பல்வேறு அமைப்புகளும் அவர்களுக்குத் துணையாக இறங்கியிருக்கின்றன. மாநில, மத்திய அரசு சார்பில் பேசுபவர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவே பேசினாலும், ஜல்லிக்கட்டுக்கு விதித்த தடையை உச்ச நீதிமன்றம் விலக்குவதற்கான சமிக்ஞைகள் எதுவும் கண்ணுக்கு எட்டிய வரை தெரியவில்லை.

பொங்கல்பண்டிகையோடு பிரிக்கவே முடியாத உறவைக் கொண்டவை மாடுகள். ஜல்லிக்கட்டு விளையாட்டானது கிராமப்புறத் தமிழகத்துடன் எவ்வளவு உணர்வுரீதியாகப் பிணைக்கப்பட்டது என்பதை அதை வெளியிலிருந்து பார்ப்பவர்களால் அத்தனை எளிதாகப் புரிந்துகொள்ள முடியாது. நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட வழக்குகள், மத்திய அரசின் நகர்வுகளின் விளைவாக 2014-ல் ஜல்லிக்கட்டு நடத்த தடை விதிக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் விலங்குகள் நலன் சார்ந்து பேசும் மேனகா காந்தி முதல் பெடா அமைப்பு வரை ஜல்லிக்கட்டுத் தடைக்காக முன்வைத்த முக்கியமான வாதம் காளைகள் துன்புறுத்தப்படுகின்றன என்பதும் அதில் கலந்துகொள்ளும் வீரர்களுக்குக் காயம், உயிரிழப்பு ஏற்படுகிறது என்பதும்தான். மனிதர்களுக்கும் பாதுகாப்பற்றதாக, மாடுகளுக்கும் துன்பம் விளைவிப்பதாக இடைப்பட்ட காலகட்டத்தில் ஜல்லிக்கட்டுமாறியதுஉண்மை. ஆனால், அரசுத் தலையீட்டின்பேரில் பின்னர் ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய விதிகள், கட்டுப்பாடுகள் எல்லாவற்றையும் ஜல்லிக்கட்டு நடத்துவோர் ஏற்றுச் செயற்பட்டார்கள். மாவட்ட நிர்வாகத்தின் கண்காணிப்பிலேயே ஜல்லிகட்டு நடத்தப்பட்டுவந்தது.

"ஜல்லிக்கட்டு விளையாட்டானது உள்ளூர் மாட்டினங்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டோடு தொடர்புடையது. ஜல்லிக்கட்டுக்குத் தடை கோருபவர்களின் பின்னணியில் சர்வதேசச் சந்தை அரசியல் இருக்கிறது" எனும் ஜல்லிக்கட்டு ஆதரவாளர்களின்வாதம் புறந்தள்ளக்கூடியது அல்ல. புலி, கரடி போன்ற வனவிலங்குகளின் பட்டியலில் இடம் பெறத்தக்கதல்ல மாட்டினம். ஜல்லிக்கட்டு சார்ந்தும் அதில் பங்கேற்போர், காளைகள் சார்ந்தும் அரசுக்கு மேலதிகம் கவலைகள் இருந்தால், அவற்றைக் களைய மேலதிகம் என்னென்ன நடவடிக்கைகள் தேவையோ அவற்றுக்கு உத்தரவிட்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளோடு ஜல்லிக்கட்டை நடத்துவதே இப்பிரச்சினைக்கான தீர்வாக இருக்க முடியும்.

இதுவரை ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான நிலைப் பாட்டிலேயே தமிழக அரசும் மாநிலத்தின் அனைத்துப் பிரதான கட்சிகளும் இருக்கினறன. மத்திய அரசும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான நிலைப் பாட்டில் இருப்பதாகவே தன்னைக் காட்டிக்கொள்கிறது. தமிழக அரசு ஏனைய எதிர்க்கட்சிகளையும் தன்னோடு ஒருங்கிணைத்துக்கொண்டு, மத்திய அரசுக்கு இது தொடர்பில் தீவிரமான அழுத்தங்களைக் கொடுத்தால், இந்த விவகாரத்தில் நிரந்தரமான தீர்வை எட்டிவிட முடியும். நீதிமன்றத்தில் போராடும் வியூகத்தை அரசியல் களம் நோக்கித் திருப்ப வேண்டும் தமிழக அரசு.

(நன்றி:-தஹிந்து)

# "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"

## உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி டுவிட்




உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி மார்க்ண்டேய கட்ஜு ஜல்லிக்கட்டுக்குஆதரவாக டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு ஆதர வாக மாநிலம் முழுவதும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கடந்த சில நாட்களாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் உச்சநீதிமன்ற முன்னால் நீதிபதி மார்கண்டேயகட்ஜு தனது டுவிட்டர் பக்கத்தில் தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக பதிவிட்டுள்ளார்.

மார்கண்டேய கட்ஜு ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும் தமிழர் பண்பாடு மற்றும் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



# அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று பதவியேற்பு

## ஆதரவாளர்கள் குவிந்தனர்





(வோஷிங்டன்)
அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் இன்று பதவியேற்கிறார்.

இதையொட்டி பதவியேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வோஷிங்டனில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குவிந்துள்ளனர்.

நவம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார்.

இதையடுத்து அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக அவர் பதவியேற்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ஆபிரஹாம் லிங்கன் முதன் முறையாக பதவியேற்றபோது பயன்படுத்திய பைபிளையும், சிறு வயது முதல் தான் பயன்படுத்தி வரும் பைபிளையும் ஆணையாகக் கொண்டு ட்ரம்ப் பதவியேற்கிறார்.

பாடசாலைப் பருவத்தில் படித்துக் கொண்டிருந்தபோது 1955 ஜூன் 12 ஆம் திகதி அன்று குழந்தைகள் தினத்துக்காக அந்த பைபிளை ட்ரம்புக்கு அவரது தாயார் பரிசாக வழங்கினார்.

பதவியேற்பு விழாவுக்கான கொண்டாட்டங்கள் முறைப்படி இன்று நடக்கும். அமெரிக்காவை மீண்டும் சிறந்த நாடாக உருவாக்க வேண்டும் என்ற முழக்கத்துடன் இவ்விழா தொடங்குகிறது.

இதையொட்டி வோஷிங்டனில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அவரது ஆதரவாளர்கள் குவிந்து வருகின்றனர். அசம்பாவித சம்பவங்களை தடுக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ள பராக் ஒபாமா நேற்று முன்தினம் விழா ஏற்பாடுகளை மேற்பார்வையிட்டார்.

இதற்கிடையே வோஷிங்டனில் ட்ரம்பின் ஆதரவாளர்கள் அடுக்கடுக்கான விழாக்களை நடத்தி வருகின்றனர்.

வரலாற்று சிறப்புமிக்க நஷனல் மாலில் பதவியேற்பு விழா நடைபெறுகிறது. அங்குள்ள லிங்கன் நினைவிடத்தில் கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவிர இராணுவ வாத்தியங்களின் இசைக் கச்சேரியும், பிரபல வாணவேடிக்கை நிபுணர் குருசியின் வாண வேடிக்கையும் நடைபெறும்.(இ-7)

# அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி புஷ் வைத்தியசாலையில் அனுமதி; தீவிர சிகிச்சை





(வோஷிங்டன்)
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உடல் நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் 41 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்தவர் ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ்.

92 வயதான இவர் தற்போது டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள தனது இல்லத்தில் வசித்து வருகிறார். அமெரிக்க ஜனாதிபதியாக பதவி வகித்தவர்களிலேயே இவர்தான் வயது மூத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பார்கின்சன் நோயால் அவதிப்பட்டு வந்த புஷ், நடக்க முடியாமல் சக்கர நாற்காலியைப் பயன்படுத்தி வந்தார்.

இந்நிலையில், அவரது உடல்நிலை பாதிப்படைந்ததால் ஹூஸ்டனில் உள்ள வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு வைத்தியர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

புஷ்ஷின் உடல் நிலைநன்றாக இருப்பதாகவும், வைத்தியர்கள் தொடர்ந்து அவரது உடல் நிலையை கண்காணித்து வருவதாகவும், சிகிச்சை முடிந்து இரண்டு நாட்களில் வீடு திரும்புவார் என்று ஜோர்ஜ் புஷ்ஷின் அலுவலக உதவியாளர் தெரிவித்துள்ளார். (இ-3)

## காந்தியின் வழியில் செல்கிறாராம் கம்மன்பில

# கூட்டு எதிரணியினரின் போராட்டம் தொடரும்

**(கொழும்பு) மகாத்மா காந்தியின் அகிம்சைப் போராட்டத்தின் போது வெள்ளைக்காரர்கள் அவரை சிறையில் அடைத்திருந்தார்கள். அவர் அதற்கு பயப்படவில்லை. அவரது போராட்டம் போல எங்கள் போராட்டமும் தொடர்ந்து கொண்டே இருக்கும் என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**



கைது செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை விடுதலை செய்யக் கோரி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு முன்னால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இதன்போது அவர்மேலும் தெரிவிக்கையில்,

"மரணத்திற்கும் சிறைச்சாலைக்கும் சோதனைகளுக்கும் பயந்தவன் என நினைதது அகிம்சை போராட்டத்தில் இருந்து என்னை வெள்ளையர்களால் வெளியேற்ற முடியாது என மகாத்மா காந்தி குறிப்பிட்டார். அதேபோல தான் நாங்களும், சிறைச்சாலைக்கு பயம் இல்லை, மரணத்திற்கும் பயம் இல்லை. கடந்த ஜனவரி மாதம் 7ஆம் திகதி என்னை பொலிஸார் தாக்கினர். அந்த வேதனைகள் எதற்கும் நான் பயந்தவனும் இல்லை. இந்த பொலிஸ் உடைகளுக்கு பயந்தவனும் இல்லை.

இதனால் தான் நான் கூறுகின்றேன். ரணில் ஐயா அவர்களே! வேறு ஒரு உபாயத்தை பயன்படுத்தி எம்மை அச்சுறுத்துங்கள். பூஜித என்கிறவருக்கு நான்பயம்இல்லை. இந்த போராட்டம் தொடரும் என அரசுக்கு உறுதியாக கூறுகின்றேன். நல்லாட்சி அரசில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்கள் அமைச்சர்களாக இருக்கின்றார்கள், அவர்களை கைது செய்ய பொலிஸாருக்கு முடியாது. எனக்கு தெரிந்த நீதியின் படி குற்றம் செய்தவர் தான் தண்டனை பெற வேண்டும்.

குற்றம் செய்தமைக்கான ஆதாரமோ அல்லது குற்றம் செய்ய பணித்தமைக்கான ஆதாரமோ இல்லை. எவற்றை வைத்து இவ்வாறு கைது செய்கின்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை" என இதன் போது அவர் சுட்டிக் காட்டியிருந்தார். (இ-3)

# அத்துரலிய ரத்ன தேரரிடமிருந்து எம்.பி. பதவியைப் பறிக்க முயற்சி



(கொழும்ப)

நாடாளுமன்றத்தில் சுதந்திரமாகச் செயற்படப் போவதாக அறிவித்துள்ள அத்துரலிய ரத்ன தேரர், ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் ஆசனத்தை திருப்ப ஒப்படைக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

சுதந்திரமாகச் செயற்படப் போவதாக முடிவு செய்துள்ள அத்துரலிய ரத்ன தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகுவார் என்று தமது கட்சி எதிர்பார்ப்பதாக, ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம்ஆண்டுநாடாளுமன்றத் தேர்தலின் போது ஐ.தே.கவுக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமையவே, அத்துரலிய ரத்ன தேரருக்கு ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டதாகவும் அவர் சுடடிக்காட்டியுள்ளார்.

இதனிடையே சொந்த நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட முடிவு செய்துள்ள அத்துரலிய ரத்ன தேரர், தேசியப் பட்டியல் ஆசனத்தை விட்டு விலகுவார் என்று எதிர்பார்ப்பதாக, ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர் வண. ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

தேசியப் பட்டியல் ஆசனத்தை விட்டு விலக மறுத்தால், அவருக்கு 'எதிராக ஐ.தே.க. சட்ட நடவடிக்கையில் இறங்கக் கூடும் என்றும் அரசியல் வட்டாரங்கள் ஊடாகத் தெரிய வருகிறது.(இ-3)

# சுவீடன் வெளிவிவகார அமைச்சருடன் வெளிவிவகார அமைச்சர் மங்கள பேச்சு


(கொழும்பு)

சுவீடனுக்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மார்கொட் வோல்ஸ்ட்ரோமைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஸ்றொக்ஹோமில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயன்முறைகள், இருதரப்பு ஒத்துழைப்பு, பிராந்திய விவகாரங்கள் குறித்து வெளிவிவகார அமைச்சருடன் பேசியதாக, சுவிஸ் வெளிவிவகார அமைச்சர் மார்கொட் வோல்ஸ்ட்ரோம் தெரிவித்துள்ளார்.

சுவீடன் வெளிவிவகார அமைச்சரின் அழைப்பின் பேரிலேயே வெளிவிவகார அமைச்சர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.



இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஒருவர், கடந்த 30 ஆண்டுகளில் சுவீடனுக்கு அரசுமுறைப் பயணத்தை மேற்கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### எடுத்த இடத்தில் வைப்பதில்லையா?

" அந்த மேசையிலேயே என் டைரி இருக்கு போய் எடுத்துக்கிட்டு வாயேன்!"

"சரிங்க...இங்கே இல்லீங்களே!"

"நல்லாப் பாரு! இல்லைன்னா அந்தப் புத்தக அலமாரியிலே இருக்கும்"

"அங்கேயும் இல்லீங்களே!"

இப்படியாக நேரம் வீணாகிக் கொண்டிருக்கும். இவரே எழுந்து போவார் வீராப்பாய்.எல்லா இடங்களையும் திரும்பிப் பார்ப்பார்.வீட்டையே தலைகீழாகப் புரட்டுவார் எங்கேயும் இராது. எரிச்சல்படுவார்.கிடந்து குதிப்பார்.

டைரியோ அலுவலகப் பையில் இருக்கும்.

இன்ன பொருள் என்றால் இன்ன இடத்தில் தான் வைக்க வேண்டும் என்று வரையறை செய்து கொள்ள வேண்டும்.பல பேரிடம் இது இருப்பதாகவே தெரியவில்லை.

மேஜர் சந்திரகாந் படத்தில் ஒரு காட்சி. நாகேஷுக்கு மேஜர் சுந்தர்ராஜன் தனக்குப் பார்வை இல்லாத போதும் எப்படி இந்த வீட்டில் நன்கு நடமாட முடிகிறது என்றும் விளக்குவார்.

நம் வீட்டில் கூட மின்சாரம் இல்லாதபோது நாம் கிட்டத்தட்டப் பார்வை இல்லாதவர்களாக ஆகிவிடுகிறோம். இந்த நேரத்தில் தான் எடுத்த இடத்தில் வைக்கும் பழக்கம் என்னமாய்க் கைகொடுக்கிறது என்பது தெரியவரும்.பலர் வீட்டில் விளக்குப் போனதும் "இங்கே தானே வச்சேன்! அங்கேதானே வச்சேன்!" என்று மெழுகுவர்த்தியை அரைமணி நேரமும் தீப்பெட்டியை முக்கால் மணி நேரமும் தேடுவார்கள்.

என் உறவினர் ஒருவர் தன் வீட்டில் நுழையும் போது எத்தனை பேர் வீட்டில் இருந்தாலும் வாங்க என்று சொல்வார். ஆனால் அவர்களருகே சென்று அமரமாட்டார். நேராய் உள்ளே போவார். சாவியை ஆணியில் மாட்டிவிட்டுத்தான் வந்து அமர்வார்.வரவேற்பறை மேசையில் சாவியை வைத்துவிட்டுப் பேசிக்கொண்டிருப்பது அவர் வழக்கமில்லை. சிலர் இதைத் தவறாகப் புரிந்து கொண்டாலும் இது ஒரு நல்ல பழக்கமே!

சிலர் டிக்கெட் பரிசோதகர் டிக்கெட்டைக் கேட்டதும் எல்லாப் பாக்கெட்களையும் பரிதாபமாகத் துழாவுவார்கள். அது அறவே வைக்கப்படாத பர்சைப் போட்டுக் குடையோ குடை என்று குடைவார்கள். பிறகு பெட்டியை வேறு குடைவார்கள்.

நம்மிடம் ஞாபகசக்தி இல்லை என்பது தான் நன்கு தெரிகிறதே. டிக்கெட்டை வாகன டோக்கனைப் பின் பாக்கெட்டில்தான் வைப்பது என்று பழக்கப்படுத்திக் கொண்டால் என்ன? பில்களா? முன் இடப்பக்கப் பாக்கெட் பணமா? முன் வலப்பக்கப் பாக்கெட் கர்ச்சீப்பா? சட்டைப் பாக்கெட் எது கேட்டாலும் சட்சட் என்று எடுத்து நீட்ட வேண்டும்.கண்டதையும் கண்ட இடங்களில் வைத்துவிட்டுப் பிறர் பரிதாபப் புன்னகையை உதிர்க்க இடந்தரக்கூடாது.

நாம் ஒவ்வொன்றையும் எங்கு வைத்தோம் என்று நினைவில் வைத்துக்கொள்வது சாத்தியமே இல்லை. ஆனால் அதற்கு இடத்தை நிர்ணயிப்பதும் அதன்படி வைப்பதும் நிச்சயம் சாத்தியம்.

உரிய இடத்தில் வைப்பதற்குச் சோம்பல்பட்டுச் சில நொடிகளைச் சில நிமிடங்களை மிச்சப்படுத்துகிறேன் பேர்வழி என்று அதைத் தேடுவதில் பலமணி நேரத்தை வீணடிப்பது எப்படிப் புத்திசாலித்தனமாகும்?

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






## 'காத்திருந்த சோனியா காந்தி... தாமதமாக வந்த ஜெயலலிதா...'

அரசியல் என்பது பிரச்சினைகளைத் தேடுவது எல்லா இடங்களிலும் அவற்றைக் கண்டறிவது அதை, தவறாக அறுதியிட்டு அதற்கு மிகத்தவறான தீர்வை வழங்குவது என்றார் அமெரிக்க நகைச்சுவை நடிகர் ஜூலியஸ் ஹென்றி. ஹூம்... உலகம் முழுவதும் அரசியலும், அரசியல்வாதிகளும் இவ்வாறுதான்போல... ஒரு சிறிய காரணத்துக்காக 13 மாதங்களில் வாஜ்பாய் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கலைந்தது. அடுத்த தேர்தல்... அடுத்த கூட்டணி... ஏறத்தாழ 13 மாதங்கள் மத்தியில் ஆளுமை செய்த அ.தி.மு.கவின் நிலைதான் இப்போது திண்டாட்டமானது. ஆம்... பா.ஜ.க. அரசு கவிழ்வதற்கு அ.தி.மு.கவும் ஒரு காரணம். அதனால், அதனுடன் கூட்டணி வைக்க முடியாது. பா.ஜ.கவுடன் கூட்டணி வைத்தபோது காங்கிரஸையும், அதன் தலைவர் சோனியா காந்தியையும் மிகக் கேவலமாக விமர்சித்திருக்கிறோம்... என்ன செய்யலாம் என்று ஒரு பக்கம் ஜெயலலிதா யோசித்துக்கொண்டிருக்க... கருணாநிதி காய்களை நகர்த்தத் தொடங்கினார்.

1999ஆம் ஆண்டு, தி.மு.கவின் பொன்விழா ஆண்டு. 1949 ர்ராயபுரம் ராபின்சன் பூங்காவில் தி.மு.கவின் முதல் கூட்டத்தில் அண்ணா இவ்வாறாகப் பேசினார். "அன்புக்குரிய பெரியாரே... நாங்கள் உங்களிடமிருந்துதான் பாடம் கற்றோம். உங்கள் பாதையிலேயே நடப்போம்" என்றார். அந்த மேடையில் கருணாநிதியும் இருந்தார். கருணாநிதிக்கும்... அன்பழகனுக்கும் இதுவெல்லாம் நினைவில் இருந்ததா என்று தெரியவில்லை. ஆனால், அதை நினைவுகூர விரும்பவில்லை என்பது மட்டும் மிகத் தெளிவாகத் தெரிந்தது. தி.மு.கவின் பொன்விழா ஆண்டில், யாருடன் அந்தக் கட்சி இத்தனை தசாப்தங்களாக கொள்கை போர் நடத்தியதோ... அவர்களுடனே கூட்டணி வைத்தது. ஆம், தி.மு.க - பா.ஜ.க. கூட்டணி ஏற்பட்டது. இந்த நகர்வு ஜெயலலிதாவே எதிர்பாராத ஒன்று. தன் அரசியல் இருப்பை இல்லாமல் செய்ய, கருணாநிதி இந்த எல்லைவரை செல்வார என்று ஜெயலலிதா நினைக்கவில்லை. காங்கிரஸுடன் கூட்டணி வைக்க கரங்களை நீட்டினார். இருவருக்கும் வேறுவழியில்லை. கூட்டணி சேர்ந்தார்கள்.

### 'கூடு திரும்பிய சசிகலா!'

"இனி சசிகலாவுடனும்... அவர் குடும்பத்துடனும் எந்த உறவும் இல்லை" என்று ஜெயலலிதா சொல்லி இருந்தார் அல்லவா...? அந்த வார்த்தைகள் எல்லாம் தண்ணீரில் எழுதிய கதை ஆனது. ஆம்... 1999 தேர்தலில் சசிகலாவின் உறவினரான டி.டி.வி.தினகரனுக்கு பெரியகுளம் தொகுதியை ஒதுக்கினார். இது அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகளையே புருவம் உயர்த்தச் செய்தது. அதுமட்டுமல்ல, இரண்டு ஆண்டுகள் சிறையில் இருந்துவிட்டு ஜாமீனில் வெளியே வந்த சசிகலாவும் போயஸ் கார்டனுக்குத் திரும்பி விட்டார் என்று பேச்சுகள் உலாவத் தொடங்கின. சில காலம் வெளியே வராமல் இருந்த சசிகலா... ஜெயலலிதாவின் தேர்தல் பிரசார கூட்டங்களின் போது, உடன்வரத் தொடங்கினார். மீண்டும் தொண்டர்களிடையே முணுமுணுப்பு ஏற்பட்டு அடங்கியது. மூத்த நிர்வாகிகளும், தொண்டர்களும் ஒருகட்டத்தில் புரிந்துகொண்டார்கள்... அரசியல்போல அதிக உழைப்பை உறிஞ்சும் ஒரு துறையில், தனியாக ஒரு பெண்ணால் இயங்குவது கடினம். நிச்சயம் துணை நிற்க ஒரு நட்பு தேவை என்பதை.

ஜெயலலிதாவே பின்னாளில் ஒரு பேட்டியில் இதுகுறித்து விரிவாகப் பேசியிருக்கிறார். "என் மீதான விசுவாசத்தின் காரணமாகவே, மற்றவர்களால் மிகத்தவறாகச் சித்திரிக்கப்பட்ட, புரிந்துகொள்ளப்பட்ட ஒரு பெண் சசிகலா. எனக்காக அவர் மிகச் சிரமப்பட்டிருக்கிறார். சிறைத்தண்டனையை அனுபவித்திருக்கிறார். என்னுடனான நட்பு மட்டும் இல்லையென்றால், அவரை யாருமே இந்த அளவு தொந்தரவு செய்திருக்க மாட்டார்கள். பரபரப்பான அரசியல் வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒருவரால், அவருடைய குடும்பத்தையும் கவனித்துக் கொள்வது என்பது மிகவும் கடினமான காரியம். பெரும்பாலான ஆண்களுக்கு இது புரிவதில்லை. ஏனென்றால், அவர்களுக்கு வீட்டில் மனைவியோ அல்லது வேறு யாரோ இருப்பார்கள். இதனால்தான், ஆண்கள் எங்களுடைய நட்பை மிகவும் கொச்சைப்படுத்துகிறார்கள்."

சரி, மீண்டும் விடயத்துக்கு வருவோம்... ஜெயலலிதா சென்ற இடங்களில் எல்லாம் கூட்டம் திரண்டது. உண்மையில், இது ஜெயலலிதாவுக்கு பெரும் ஆறுதலைத் தந்தது. அதே நேரம், மமதையையும். அது, ஒருகட்டத்தில் மிகமோசமாக வெளிப்பட்டது.

### 'காத்திருந்த சோனியா!'


ஆம், விழுப்புரத்தில் சோனியாவும் - ஜெயலலிதாவும் இணைந்து தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. டில்லியிலிருந்து சோனியா வந்துவிட்டார். ஜெயலலிதாவுக்காகக் காத்திருந்தார்... ஏறத்தாழ இரண்டு மணி நேரங்களுக்கு மேல். ஒரு கட்டத்தில் சோனியா, தன் உரையை முடித்துக்கொண்டு கிளம்பிவிட்டார். "கடுமையான வாகன நெரிசலால் தான் கூட்டத்துக்கு வரத் தாமதமாகிவிட்டது" என்றார் ஜெயலலிதா. ஆனால், இதை நம்ப அ.தி.மு.ககாரர்களே தயாராக இல்லை. இது, காங்கிரஸ்காரர்களை மிகவும் கோபப்படுத்தியது. ஏற்கனவே, தனிப்பட்ட முறையில் மோசமாக சோனியாவை, ஜெயலலிதா விமர்சித்தது... காக்கவைத்தது என எல்லாம் சேர்ந்து, அந்தத் தேர்தல் பிரசாரம் முழுவதும் மிக இறுக்கமாகத்தான் சென்றது.

அப்போது கருணாநிதி, "காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தாலும், ஜெயலலிதா கொடுக்கும் அழுத்தங்கள் தாங்காமல்... நிச்சயம், சோனியா காந்தி இத்தாலிக்கே சென்றுவிடுவார்" என்றார். அது மாதிரியெல்லாம் ஏற்படாத வண்ணம் தேர்தல் முடிவுகள் வந்தன. ஆம், மத்தியில் காங்கிரஸ் கூட்டணி படுதோல்வி அடைந்தது. அ.தி.மு.கவுக்கு பெரிய சேதம் இல்லாமல் தமிழகத்தில் 10 தொகுதிகளைக் கைப்பற்றியது. தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 26 தொகுதிகளைக் கைப்பற்றி இருந்தது.

மத்தியில், பா.ஜ.க .ஆட்சி. அந்த அமைச்சரவையில் தி.மு.கவுக்கு இடம். சென்ற ஆட்சியின்போது, யாரை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் என்று ஜெயலலிதா அழுத்தம் தந்தாரோ... அந்த ராம்ஜெத்மலானிக்கும் அமைச்சரவையில் இடம். அதுவும் சட்ட அமைச்சர். இப்போது ஜெயலலிதாவுக்கு யாரை நொந்துகொள்வது என்று தெரியவில்லை. அதன பிறகு, நடந்த சில சம்பவங்களும் ஜெயலலிதாவுக்கு சாதகமானதாக இல்லை.

(தொடரும்)





# படகு மூழ்கி 180 அகதிகள் பலி!

லிபியா அருகே மத்திய தரைக் கடல் பகுதியில் அகதிகள் படகு மூழ்கி விபத்துக்குள்ளானதில் 180பேர் உயிரிழுந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு (ஐஓஎம்), ஐ.நா. அகதிகள் நல ஆணையம் (யு.என்.எச்.சி.ஆர்) ஆகியவற்றைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் தெரிவித்ததாவது,

கிழக்கு ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 180இற்கும் மேற்பட்டோர், ஐரோப்பிய நாடுகளின் அடைக்கலம் தேடி லிபியாவிலிருந்து படகு மூலம் கடந்த வெள்ளிக்கிழமை புறப்பட்டனர். புறப்பட்ட 5 மணி நேரத்தில், அந்த அகதிகள் படகின் இயந்திரம் செயலிழந்ததையடுத்து, இருதளங்களைக் கொண்ட அநதப் படகு கொஞ்சம் கொஞசமாக கடலுக்குள் மூழ்கி யது. இந்த விபத்தில் ஒரு பெண் உட்பட 4 பேரை மட்டுமே பிரான்ஸ் மீட்புப் படகால் உயிருடன் மீட்க முடிந்தது. மேலும், விபத்தில் உயிரிழந்த 4 பேரது உடல்களும் மீட்கப் பட்டன.

விபத்தில் உயிர் பிழைத்தவர்களிடம் நடத்திய விசாரணையில், படகுடன் கடலுக்குள் மூழ்கி சுமார் 180 பேர் உயிரிழந்ததாக தெரியவந்துள்ளது. உயிர் பிழைத்தவர்களில் இரண்டு பேர் எரித்ரேயா நாட்டையும், இருவர் எதியோப்பியாவையும் சேர்ந்தவர்கள் என்று மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். (இ-7)

# நல்லிணக்கத்துக்காக புதிய யோசனை ஒன்றை முன்வைத்தார் சந்திரிகா

நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை பாடசாலை பாடவிதானத்தில் உள்ளடக்க வேண்டும்என முன்னாள்ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க யோசனை தெரிவித்துள ளார்.

நாம் எவ்வாறான சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறோம் என்பது தொடர்பில் ஆழமான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. இதனை தீர்ப்பதற்கான வழி முறைகள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், இலங்கையின் பாடசாலை பாடவிதானத்தில் நல்லிணக்கம் மற்றும் தேசிய ஐக்கியம் என்பவற்றை உள்ளடக்க கல்வித் திணைக்களம் உறுதியளித்துள்ளது (இ-3)

# யாழ். பல்கலை. மருத்துவபீட மாணவர்களின் கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானதே

## மாக்சிச லெனினிசக் கட்சி ஆதரவு

இலங்கையின் இலவச மருத்துவக் கல்வியையும், மக்களுக்கான இலவச மருத்துவத்தையும் பாதுகாக்கக் கோரியும் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்குவதை தடை செய்ய வற்புறுத்தியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் முன்னெடுத்து வரும் ஒரு வாரகால வகுப்புப் பகிஷ்கரிப்பும் கவனயீர்ப்புப் போராட்டமும் முற்றிலும் நியாயமானதாகும். ஏகப் பெரும்பான்மையான சாதாரண மக்களின் இலவச மருத்துவக் கல்விக்கான உரிமையையும் இலவச சுகாதாரத்தையும் பாதுகாக்கும் நோக்குடனான யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் போராட்டத்தை எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி வரவேற்று ஆதரவு தெரிவிப்பதுடன் சமூக அக்கறையுள்ள அனைவரும் அவர்களது கோரிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அவ்வறிக்கையில், கடந்த அரசாங்கத்தின் போது 2008 ஆம் ஆண்டில் சைற்ரம் (SAITM) எனப்படும் தெற்காசிய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ கல்வி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. முற்றிலும் தனியார் முதலீட்டிலான இந்நிறுவனத்தில் 2011ம் ஆண்டு மருத்துவப் பட்டப் படிப்பிற்கான அலகு உருவாக்கப்பட்டுபெருந்தொகைப் பணம் செலுத்தும் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். இது தனியார் மருத்துவக் கல்லூரிகளை நாட்டிற்குள்கொண்டு வந்து சேர்க்கும் முதல் முயற்சியாக அமைந்தது. இதனை ஆரமபத்தில் இருந்தே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் சமூக அக்கறையாளர்களும் மற்றும் முற்போக்கு சக்திகளும் எதிர்த்து வந்துள்ளனர். பல்கலைக்கழக மாண வர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை அன்றைய அரசாங்கத்தின் கீழும் இன்றைய நல்லாட்சியின் பெயரிலான அரசாங்கத்தின் கீழும் முன்னெடுத்து வந்துள்ளனர்.

இந் நிலையில் சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரியைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் மறுத்து வருகின்றது. ஆனால் இம் மருத்துவக் கல்லூரிக்கு அரசாங்கம் அனுமதி அளித்தால் மேலும் பல தனியார் மருத்துவக் கல்லூரிகள் பெரும் முதலீட்டில் தோற்றம் பெறும் வாய்ப்பே அதிகரிக்கும். அதன மூலம் நாட்டில் தொடர்ந்து இருந்து வரும் இலவச மருத்துவக் கல்வியும், மக்களுக்கான இலவச மருத்துவத்துறையும் தனியார் முதலீட்டுத் துறையினரால் விழுங் கப்பட்டு நாசமாக்கப்படும் அபாயம் இன்றிருப்பதையும் விட அதிகரித்து செல்லவே செய்யும். இதனால் பாதிக்கப்படப் போவது சாதாரண மக்களாகவே இருப்பர். எனவே, ஏற்கனவே அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்து வரும் போராட்டங்களோடு யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களும் இணைந்து நின்று தமது பகிஷ்கரிப்பு - கவனயீர்ப்புப் போராட்டத்தை சமூக அக்கறையோடும் மக்களின இலவச மருத்துவ நலன் நோக்கிலும் முன்னெடுத்து வருவது முற்றிலும் நியாயமானதும் வரவேற்கத்தக்கது மாகும். ஆதலால் அனைத்து மக்களும் இப்போரட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பக்கபல மாக நிற்பது அவசியமாகும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 963

ராதை




துளசி

தகுதியை மீறி ஆசைப்படக் கூடாது என்பது உண்மைதான்! ஆனால், என் தகுதி என்ன என்பதை நீங்கள் தீர்மானிக்கக் கூடாது!

சிந்து




சியான்




சியான்




கிரு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்ற நல்லிணக்க வார நிகழ்வில் சந்திரிகா





ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேசிய ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்கும் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் ஜனவரி 8ஆம் திகதிமுதல் 14ஆம் திகதிவரையிலான காலப்பகுதியினை நல்லிணக்க வாரமாகப் பிரகடனப்படுத்தினார். இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் முதல் தடவையாக நல்லிணக்க வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு, பிரகடனத்தின் ஊடாக வேறுபட்ட இன,மத,கலாசார மற்றும் பிரதேச சமூகங்களுக்கிடையில் ஒருமைப்பாடு, நல்லிணக்கம், சகோதரத்துவம் மற்றும் நிலைபேறானதும் நிரந்தரமானதுமான சமாதானம் என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையை ஐக்கியமானதும் வளமானதும் செழிப்பானதுமான நாடாக மாற்றுவதாகும்.

இதேவேளை ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கவாரம் கடந்த 17ஆம் திகதி ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்றது. இதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மேலும் இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, ஆனந்தா கல்லூரி அதிபர் கீர்த்திரட்ன,உப அதிபர், அமைச்சின் சிரேஷ்ட அலுவலர்கள்,ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்குபற்றி நல்லிணக்கத்திற்கான உறுதி மொழியினை எடுத்தனர். மாணவர்களினால் மும்மொழிகளிலும் நாட்டின் இன, மத,மொழி,பிரதேசம் தொடர்பான பல்வகைத்தன்மையின் செழிப்பு மற்றும் வேற்றுமையில் ஒற்றுமை என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றப்பட்டன.

இந்நிகழ்ச்சித்திட்டம் நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைகளிலும், ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமாதானத்திற்கான மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாகவும் தூதுவர்களாகவும் சக்திப்படுத்தும் நோக்குடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. (இ)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவராக மணதுங்க நியமனம்



தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் புதிய தலைவராக பி.எச்.மணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் வழங்கப்பட்டது.


பி.எச். மணதுங்க தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)




# எல்லை நிர்ணய அறிக்கை குறித்து சிறுபான்மைக் கட்சிகள் அச்சம்







“எம்முடன் கலந்தாலோசிக்காமல் எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான வர்த்தமானியை அச்சடிக்க வேண்டாம்” என சிறுபான்மைக் கட்சிகள் கோரியுள்ளன.

“எல்லை மீள்நிர்ணய அறிக்கையை அவதானிக்கின்றபோது, அதிலுள்ள விடயங்கள், சிறுபான்மை இனங்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன.

“ஆகையால் எல்லை நிர்ணய அறிக்கையை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு முன்னதாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, எம்முடன் கலந்துரையாட வேண்டும்” என்றும் அக்கட்சிகள் கோரியுள்ளன.

சிறுபான்மைக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலைவர்கள், கொழும்பில் உள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸல்லாமில் கலந்துரையாடலில் நேற்று முன்தினம் மாலை ஈடுபட்டனர். அந்தக் கலந்துரையாடலையடுத்து, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கருத்துத் தெரிவிக்கையில், “அரசியலமைப்புத் தொடர்பிலான திருத்தங்களைக் கூட்டாக முன்வைப்பது தொடர்பில், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் மற்றும் சிறுபான்மைக்கட்சிகள் இணைந்து கலந் துரையாடியுள்ளோம்.

“நாட்டின் அதிகாரப் பகிர்வு, நாட்டின் இறைமை உள்ளிட்ட பல விடயங்களை முன்வைக்கவும், கூட்டாக மாற்று யோசனைகளைச் சமர்ப்பிக்கவும் தீர்மானித்துள்ளோம். “எல்லை மீள்நிர்ணயக் குழுவின் அறிக்கை தொடர்பாக விமர்சனங்களைக் கருத்தில் எடுக்க, சட்ட திருத்தங்களைச் செய்யாமல், அதனை அவசரமாக நடைமுறைப்படுத்துவது, எமக்கு இழைக்கப்படும் அநீதியாகும். இந்த சர்ச்சைக்குத் தீர்வு கண்ட பின்னர் தான், வர்த்தமானி அறிவித்தல் வெளியிட வேண்டும்.

“தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், இந்த அறிக்கையில் 54 இடங்களில் சட்டதிருத்தம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார். சிறுபான்மை மற்றும் அனைத்துக் கட்சிகளுடன் தீர்க்கமாகக் கலந்துரையாடி, ஒருமித்த கருத்தைப் பெற்ற பின்னர், அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பது சிறந்தது” என்றார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனோ கணேசன், “சிறுபான்மைக் கட்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த அறிக்கையை, வர்த்தமானியில் வெளியிட அவசரப்பட வேண்டாம்என, அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

“அரசியலமைப்புப் பேரவைக்குச் சில பரிந்துரைகளை முன்வைக்க, நாங்கள் கூடியிருந்தோம். ஜனாதிபதி முறைமை, அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கல், மதம், மொழி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய கூட்டறிக்கை, அடுத்தவாரம் வழங்கப்படும்.

“இந்த நேரத்தில் அதனை விட முக்கியமான விடயமாக, எல்லை மீள்நிர்ணய அறிக்கை உள்ளது. இந்த அறிக்கையில் சிறுபான்மையின மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் உள்ளதாகத் தெரிகின்றது. இது தொடர்பில் அவசரப்பட வேண்டாம் என பைஸர முஸ்தபா மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

“நியாயமான தேர்தல் முறையை உருவாக்கி, சகலருக்கும் நியாயமான முறையிலான தேர்தல் நடந்தாலே, அது ஜனநாயக ரீதியிலான தேர்தலாக அமையும்” என்றார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கருத்துத் தெரிவிக்கையில், “புதிய அரசியலமைப்புத் திருத்தத்தில், சிறுபான்மை மக்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்வகையில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில், பொது இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில், கலந்துரையாடி, சில தீர்மானங்களை எடுத்துள்ளோம் அவை, விரைவில் வெளிப்படுத்தப்படும்.

“தற்போது நான்கைந்து கட்சிகள் கூடியிருந்தாலும், ஏனைய சிறுபான்மைக் கட்சிகளும் விரைவில் கூடி, இந்தக் கருத்தை உறுதிப்படுத்துவார்கள். சிறுபான்மைக் கட்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கை உள்ளதால், இந்த முயற்சியை இடைநிறுத்தி, அது தொடர்பில் பொது இணக்கப்பாட்டுக்கு வந்த பின்னர், தேர்தலை முன்னெடுப்பதே சிறந்தது” என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விசாரணை நீதிமன்றங்கள் அருகில் இருக்க வேண்டும்

## காணாமற்போனவர்களின் உறவினர்கள் வலியுறுத்து

விசாரணை நடத்தும் நீதிமன்றங்கள் தங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டும்.காணாமற்போனோரின் உறவினர்கள் விரும்புவதாக நல்லிணக்கச் செயலணியின் தலைவர் மனோரி முத்தெடுவேகம தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கச் செயலணி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று விசாரணைகளையும், யோசனைகளையும் பொதுமக்கள் மற்றும் அமைப்பு சார்ந்தவர்களிடம் பதிவு செய்தது.

இதற்கமைய, காணாமற்போனோரின் உறவினர்கள் உள்ளிட்ட யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பெரும்பாலும் சட்டம் மற்றும் விசாரணைகள் குறித்த அறிவினையும் பொருள்வளத்தையும்கொண்டவர்களாக இல்லை.

அவர்கள் கொழும்பிலோ, வெளிநாடுகளிலேயே தங்களுக்கான விசாரணை நீதிமன்றங்கள் அமைவதை விரும்பவில்லை.

விசாரணை நடத்தும் நீதிமன்றங்கள் தங்களுக்கு அருகிலேயே இருக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள் என நல்லிணக்க செயலணியின் தலைவர் மனோரிமுத்தெடுவேகம மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# அரிசியின் விலை மேலும் குறையும்

## அமைச்சர் ராஜித தகவல்



அரிசியின் விலை சந்தையல்தற்பொழுது குறைவடைந்துள்ளதாகவும், இறக்குமதி செய்யப்படும் அரிசி சந்தைக்கு வந்த பின்னர் அரிசியின் விலை மேலும் குறையும் என்று சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப பேச்சாளருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல்திணைகளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுபபிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைக் தெரிவித்தார்.

விவசாயிகளின் எதிர்வரும் நெல் அறுவடைக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையிலேயே தற்போது அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது புறக்கோட்டை சந்தையில் ஒரு கிலோ அரிசி 80 ரூபா தொடக்கம் 82 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றதாகவும் தெரிவித்தார்.

சில வர்த்தகர்களினால் முடக்கிவைக்கப்பட்டிருக்கும் அரசி கையிருப்பு விலை வீழ்ச்சியை அடுத்து சந்தைக்கு வரும். அப்பொழுது மேலும் அரிசியின் விலை வீழ்ச்சியடையும்.

பொதுமக்களின் நன்மை கருதியே நாம் அரிசி இறக்குமதியை மேற்கொண்டோம் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# மகிந்த நாட்டைக்கொள்ளையடித்தார் ஆனால் காட்டிக்கொடுக்கவில்லை

## தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொள்ளையடித்தார் என சிங்கள கடும்போக்குவாத அமைப்புக்களில் ஒன்றான தேசப்பற்றுடைய தேசிய அமைப்பின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"நாட்டை சாப்பிடவில்லை ஹோய், மகிந்த ராஜபக்ஷ நாட்டை காப்பாற்றியுள்ளார்.

நீ என்ன பிதற்றுகின்றாய். நீ எந்த ஊடகத்தைச் சேர்ந்தவன்?

ஊடகவியலாளர்கள்:- "மகிந்த நாட்டை சாப்பிடவில்லை என்றா கூறுகின்றீர்கள்?"

குணதாச அமரசேகர:- "ஆம் களவெடுத்த போதிலும் அவர் நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை. மகிந்த ஒரு போதும் நாட்டை காட்டிக் கொடுக்கவில்லை" என தெரிவித்துள்ளார். (இ-3)



# சீர்திருத்தங்கள் பெப்ரவரி, மார்ச்சில் அறிவிக்கப்படும்

## பிரதமர் தெரிவிப்பு



இலங்கை கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களை முன்னெடுத்து வருவதாகவும், அது தொடர்பிலான அறிவித்தலை, பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் அரசாங்கம் அறிவிக்கும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய வரிச்சலுகைகள், பாரிய பொருளாதார உறுதிப்படுத்தல்கள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படுவதானது இலங்கை மிகவும் இலகுவாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான சூழலை உருவாக்குமென அவர் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதமர் அங்கு நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே இந்த விடயங்களை கூறியுள்ளார்.

இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடவுள்ளதோடு, இந்தியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ஐந்து மாநிலங்களில் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடரபில் தனித்தனி ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை எதிர்பார்த்துள்ளதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

சிங்கப்பூருடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பில் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்திவருவதாக தெரிவித்துள்ள பிரதமர் இது வங்காள விரிகுடாவில் அமைநதுள்ள ஏனைய நாடுகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு வாய்ப்பாக அமையுமெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் அடுத்தகட்டமாக மியன்மார், மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பில் அவதானம் செலுத்தவுள்ளதாகவும் அவர தெரிவித்தார்.

சீனா மற்றும் ஜப்பானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது தொடர்பிலும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

# ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக கொழும்பிலும் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் தமிழர்கள் பலரும் ஜல்லிக்கட்டிற்கு ஆதரவாக பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த வகையில் கொழும்பிலும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் ஜல்லிக்கட்டின் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# நாட்டு மக்களிடம் அரசு கோரிக்கை

நீரையும் மின்சாரத்தையும் வீண்விரயம் செய்யாது நாட்டு மக்கள் எமக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், எக்காரணம் கொண்டும் நீர், மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது. மேலும் மின் துண்டிப்போ அல்லது நீர் விநியோகத்திற்கு தடையோ ஏற்படாது. அதற்கு மாறாக சில பிரதேசங்களில் மாத்திரம் நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படும் என அரசாங்கம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

வரட்சியான காலநிலை தொடர்பான விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தலைவர் கே.ஏ.அன்சார் மற்றும் மின்சார சபை தலைவர் அநுர விஜயபால ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். (இ-3)

# இரு தமிழ் இளைஞர்களை காப்பாற்றிய இராணுச் சிப்பாய் கௌரவிப்பு





(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பகுதியில் குளிக்கச் சென்று அலையால் இழுத்துச் செல்லப்பட்ட இரண்டு இளைஞர்களை காப்பாற்றிய இராணுவ சிப்பாய் யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகேஸ் சேனநாயக்கவினால் நேற்றைய தினம் அவரது அலுவலகத்தில் வைத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த நபர் கடலில் குளிக்கச் சென்ற வேளை 200 மீற்றர் தூரம் அளவில் அலையால் அடித்து செல்லப்பட்டுள்ளார். அவரை காப்பாற்ற சென்ற மற்றுமொரு நபரும் அலையில் இழுத்துச்செல்லப்பட்டுள்ளார.

அப்போது 551 ஆவது படைப்பிரிவில் கடமையில் ஈடுபட்டிருந்த கோப்ரல் சுனில என்பவர் இருவரும் உயிருககு போராடுவதை அவதானித்து வேறு ஒரு நபரை துணைக்கு அழைத்துச் சென்று உடனடியாக கடலில் இறங்கி கி.காந்தன் மற்றும் சுதர்சன் ஆகிய இரு நபர்களையும் காப்பாற்றியுள்ளார்.

குறித்த இராணுவ சிப்பாயின் முன்மாதிரிகையான துணிகரச் செயல் முழு இராணுவத்தினருக்கும் நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளது என பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதியால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளார். (இ-9)




# கடவுளை காட்டுங்க!

நாமதேவருடைய குரு குலத்தில் பயின்ற மாணவர்களில் சைதன்யனும் ஒருவன். மற்ற மாணவர்களைக் காட்டிலும் மிகவும் புத்திசாலியாக இருந்த சைதன்யனை குருவுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே, தனக்குத் தெரிந்த அனைத்தையும் நாமதேவன் சைதன்யனுக்குக் கற்றுக் கொடுத்தார். குருகுலத்தில் பல ஆண்டுகள் பயின்ற சைதன்யனுக்கு வயது பதினெட்டு ஆயிற்று.

ஒரு நாள் நாமதேவர் அவனை அழைத்து, "மகனே நீ கற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தையும் தெரிந்து கொண்டுவிட்டாய். இத்துடன் குருகுலவாசம் உனக்கு போதும். நீ இனி உன் பெற்றோரிடம் சென்று அவர்களுக்குத் தொண்டு செய்வாய். கடவுள் எப்போதும் உனக்குத் துணை இருப்பார்," என்று வாழ்த்தினார்.

தனது குருவை தரையில் விழுந்து வணங்கிய சைதன்யன் அவரிடம் பணிவாக, "குருவே எனக்கு எவ்வளவோ பாடங்கள் கற்றுக் கொடுத்தீர்கள். ஆனால், எந்தக் கடவுளைப் பற்றி இப் பொழுது குறிப்பிட்டீர்களோ அவரை மட்டும் எனக்குக் காட்டவில்லையே! கண்ணால் காண முடியாத கடவுள் எவ்வாறு எனக்குத் துணை இருப்பார்?" என்று வினவினான்.



"சைதன்யா உன்னுடைய சந்தேகத்திற்கு பிறகு ஒரு நாள் விடை அளிக்கிறேன். நீ இப்போது வடக்கு திசையில் உள்ள காட்டின் வழியே சுசந்த நகர் எனும் நகரத்தைத் தாண்டி பவானிபுரத்திற்கு சென்று அங்குள்ள என் சகோதரனை சந்தித்து அவனுடைய சேமலாபங்களை.விசாரித்துக் கொண்டு வா?" என்றார்.

"அப்படியே செய்கிறேன் குருவே", என்று பதிலளித்தான் சைதன்யன். குருவின் மனைவி கொடுத்த உணவுப் பொட்டலங்களுடன், மறுநாள் காலையில் கிளம்பினான் சைதன்யன்.

நண்பகல் நேரம் காட்டு வழியில் பாதியைக் கடந்து விட்டான். அப்போது அவனுக்கு மிகவும் தாகம் உண்டாயிற்று. இந்தக் காட்டில் குடிக்கத் தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று தேடிய அவன் கண்களில் ஒரு வயதான பார்வையற்ற மனிதன் தென்பட்டான். அவன் செடியிலுள்ள இலைகளைக் கைகளால் தடவிப் பார்த்துப் பின் அதை முகர்ந்து பார்த்து சில இலைகளை மட்டும் பையினுள் போட்டுக்கொண்டான்.

"ஐயா, தாங்கள் எதைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"நான் இந்தக் காட்டில் வசிப்பவன். நான் மூலிகைகளை சேகரித்து பிறருக்கு வழங்குகிறேன். குருடன் என்பதால், முகர்ந்து பார்த்து மூலிகைகளைக் கண்டுபிடிக்கிறேன்," என்றான்.

(தொடரும்...)

## 01.2017 20 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1265 - இங்கிலாந்து நாடாளுமன்றம் தனது முதலாவது கூட்டத்தை வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையில் நடத்தியது.
- 1523 - இரண்டாம் கிறிஸ்டியான் டென்மார்க், நோர்வேயின் மன்னர் பதவியில் இருந்து அகற்றப்பட்டான்.
- 1649 - இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் மன்னனுக்கெதிராக தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைகள் ஆரம்பமாயின.
- 1783 - பெரிய பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகியன புரட்சிப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு அமைதி உடன்பாட்டில் கைச்சாத்திட்டன.
- 1788 - இங்கிலாந்தில் இருந்து கைதிகளை ஏற்றிக்கொண்டு வந்த முதல் தொகுதி கப்பல்களின் மூன்றாவது கப்பல் நியூ சவுத் வேல்சின் பொட்டனி விரிகுடாவை அடைந்தன.
- 1795 - பிரெஞ்சுப் படைகள் ஆம்ஸ்டர்டாமைக் கைப்பற்றின.
- 1839 - யூங்கே என்ற இடத்தில் பெரு மற்றும் பொலீவியா கூட்டுப் படைகளுடன் இடம்பெற்ற சமரில் சிலி வெற்றி பெற்றது.
- 1841 - ஹாங்காங் தீவு பிரித்தானியாவினால் கைப்பற்றப்பட்டது.
- 1887 - பேர்ள் துறைமுகத்தை கடற்படைத்தளமாகப் பாவிப்பதற்கு அமெரிக்க செனட் அனுமதியளித்தது.
- 1892 - முதலாவது அதிகாரபூர்வமான கூடைப்பந்தாட்ட விளையாட்டு மசாசுசெட்சில் இடம் பெற்றது.
- 1906 - வாரன்ஸ் சர்க்கஸ் (Warren's Circus) யாழ்ப்பாணம் வந்திறங்கியது. இதுவே யாழ்ப்பாணம் கண்ட முதலாவது சர்க்கஸ் ஆகும்.
- 1913 - யாழ்ப்பாணம், உடுவிலில் இராமநாதன் பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- 1936 - எட்டாம் எட்வேர்ட் ஐக்கிய இராச்சிய மன்னனாக முடிசூடினார்.
- 1929 - வெளிப்புறக் காட்சிகளைக் கொண்ட முதலாவது முழு-நீளத் திரைப்படம் In Old Arizona திரையிடப்பட்டது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியாவின் ரோயல் வான்படையினர் பேர்லின் மீது 2,300 தொன் குண்டுகளை வீசினர்.
- 1945 - ஹங்கேரி இரண்டாம் உலகப் போரில் தனது பங்கை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.
- 1947 - கொலை முயற்சி ஒன்றிலிருந்து மகாத்மா காந்தி உயிர் தப்பினார்.
- 1969 - முதலாவது துடிமீன் கிராப் விண்மீன் தொகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1981 - றொனால்ட் ரேகன் ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவராகி 20 நிமிடங்களில் ஈரான் தான் 444 நாட்களாகப் பிடித்து வைத்திருந்த 52 அமெரிக்க பணயக் கைதிகளையும் விடுவித்தது.
- 1990 - அசர்பைஜானிய விடுதலைக்கு ஆதரவான போராட்டம் சோவியத் இராணுவத்தினரால் நசுக்கப்பட்டது.
- 1991 - சூடான் அரசு நாடெங்கும் இஸ்லாமியச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதில் நாட்டின் வடக்குப் பகுதி முஸ்லிம்களுக்கும் தெற்கில் வாழும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் உள்நாட்டுப் போர் மேலும் தீவிரமடைந்தது.
- 1992 - பிரான்சில் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- 2001 - பிலிப்பீன்சில் இடம்பெற்ற புரட்சியில் தலைவர் ஜோசப் எஸ்ட்ராடா பதவியகற்றப்பட்டு குளோரியா மக்கபாகல்-அறாயோ தலைவரானார்.

### பிறப்புகள்

- 1873 - ஜொஹன்னஸ் வில்ஹெம் ஜென்சென், இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்றவர். (இ. 1950)
- 1920 - பெடெரிக்கோ ஃபெலினி, இத்தாலியத் திரைப்பட இயக்குனர். (இ. 1993)
- 1930 - எட்வின் ஆல்ட்ரின், அமெரிக்க விண்வெளி வீரர்.
- 1931 - டேவிட் லீ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்.
- 1956 - பில் மேகர், அமெரிக்க மேடைச் சிரிப்புரையாளர்.

### இறப்புகள்

- 1838 - ஓசியோலா, அமெரிக்க தொல்குடி போர்த் தலைவன் . (பி. 1804)
- 1936 - ஐந்தாம் ஜார்ஜ், இங்கிலாந்தின் மன்னன். (பி. 1865)
- 1987 - பெரியசாமி தூரன், கருநாடக இசை வல்லுனர் . (பி. 1908)

### சிறப்பு தினம்

- அமெரிக்க அதிபர்கள் பதவியேற்கும் நாள் .(1937 இலிருந்து)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 50 | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 100 | 170 | 300 | 170 | 200 | 200 |
| தக்காளி | 100 | 100 | 120 | 120 | 120 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 60 | 60 |
| கோவா | 30 | 20 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 100 | 40 | 60 | 60-120 | 70 | 120 | 40 |
| பூசணி | 50 | 100 | 35 | 60 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 100 | 40 | 50 | 50 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 80 | 80 | 70 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 260 | 200 | 150 | 200 | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 100 | 70 | 160 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 60 | 100 | 80 | 80 | 80 | 120 | 70 |
| பீற்றூட் | 40 | 100 | 80 | 60 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 170 | 160 | 170 | 300 | 160 |
| முருங்கைக்காய் | 550 | — | 500 | — | 600 | 600 | 700 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 80 | 90 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | — | 40 | — | 40 | 40 |
| கீரை-1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 150 | 200 | 220 | 250 | 220 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50 | 50 | 40 | 50-60 | 40 |
| இராசவள்ளி | 200 | 200 | 220 | 160 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 200 | 60 | 200 | 160 | 140 | 200 | 200 |
| முள்ளங்கி | 80 | 60 | 60 | 80 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 60 | 30 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | — | 60 | 60 | 100 | 60 |

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்லபலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது.
- செனேக்கா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தேர்தல் இலாப அரசியல் தமிழர்களுக்கு வேண்டாம்

வடக்கில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணி போல கிழக்கிலும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறுகின்றது.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் அனைத்துத் தமிழ் அமைப்புகளும் பொது மக்களும் இணைந்து எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்தவுள்ளனர்.

எனினும் இத்தகைய எழுச்சி பேரணி தமது தேர்தல் இலாப அரசியலுக்குப் பங்கம் செய்து விடுமோ என்று பயம் கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கிழக்கு மாகாணத்தில் நடைபெறவிருக்கும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு குந்தகம் செய்து வருகின்றனர்.

தமிழ் மக்கள் பேரவை என்பது தமிழ் மக்களின் அமைப்பு. தமிழ் மக்களின் உரிமையை வலியுறுத்தும் வகையிலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் மீள்குடியேற்றம் – காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணை, சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தல் போன்ற விடயங்களிலும் கரிசனை கொள்கின்ற ஒரு மக்கள் இயக்கம்.

தேர்தல் அரசியல் என்பதைக் கடந்து எங்கள் இனத்திற்காகக் குரல் கொடுத்தல் என்பதிலேயே முழுக்க முழுக்க கவனம் செலுத்திவரும் தமிழ் மக்கள் பேரவை, வடக்கில் நடத்திய எழுக தமிழ் எழுச்சிப் பேரணி உலகம் முழுமையிலும் பேசப்பட்டது.

எங்கே! எங்கள் தமிழினத்திற்கு அநீதி இழைக்கப்பட்டு விடுமோ! எங்களின் முப்பது ஆண்டு காலத் தியாகம் எந்தப் பிரயோசனமும் இன்றிப் போய்விடுமோ என்று ஏங்கிய எங்கள் புலம் பெயர் உறவுகள், வடக்கில் நடந்த எழுக தமிழ் எழுச்சிப் பேரணியால் ஆறுதல் அடைந்தனர். தமிழ் வாழும் என்று நம்பினர்.

இந்த நம்பிக்கைக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் கிழக்கிலும் எழுக தமிழ் எழுச்சிப்பேரணி நடைபெற ஏற்பாடாகிவருகிறது.

கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியின் அவசியத்தை உணர்ந்து தங்களின் தார்மிகப் பங்களிப்பை வழங்கத் தயாராகி வருகின்றனர்.

எனினும் தமிழினத்தின் சாபக்கேடாக தமிழ் அரசியல் வாதிகள் ஒரு சிலர் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியைத் தடுக்கும் வகையில் செயற்படுகின்றனர்.

இதற்குக் காரணம் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி வெற்றிகரமாக நடைபெற்றால் அது தமது தேர்தல் அரசியலுக்குப் பாதகமாக அமையும் என்ற நினைப்பேயன்றி வேறில்லை.

உண்மையில் இத்தகைய நினைப்புடன் செயற்படுகின்ற தமிழ் அரசியல்வாதிகள் தமது தேர்தல் இலாப அரசியலைக்கைவிட வேண்டும்.

தமிழ் மக்களின் விடயத்தில் தேர்தல் இலாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்படுவது எம் இனத்திற்கு நாம் செய்யும் பெரும் பாவமாகும்.

உண்மையில் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி மிகப் பெரும் வெற்றியாக – மகத்தான சாதனையாக அமையுமாயின்; இதற்கு தேர்தலை நோக்காக கொண்ட தமிழ் அரசியல்வாதிகளும் ஆதரவு கொடுப்பார்களாயின், தேர்தல் இலாபம் என்பது சுலபமாகக் கிடைக்கும் என்பதே நிதர்சனம்.

இருந்தும் தமிழ் மக்களின் நலன் என்பதை அறவே மறந்து சிலர் அரசியல் இலாபம் என்பதை மட்டுமே சிந்திக்கின்றவர்கள் தமிழ் இனத்திற்குத் துரோகம் செய்கின்றனர்.

இத்தகையவர்கள் தங்கள் தவறை இனிமேலாவது உணர்ந்து தம்மை திருத்திக் கொள்ளவேண்டும். இல்லையேல்! அவர்களின் தவறான அரசியல் நோக்கம் அவர்களை அரசியல் அநாதையாக ஆக்கும் என்பது சர்வநிச்சயம். ஆனால் தேர்தல் இலாப அரசியலுக்கு முடிவுகட்டி எம் தமிழினத்தின் வாழ்வுக்காக நாம் அனைவரும் ஒன்றாக – ஒருமித்துக் குரல் கொடுப்போம் வாருங்கள் கிழக்கின் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் அணி திரளுங்கள்.

## பட்ட அங்கிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள தால் அப்பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு உரித்தான பட்டதாரிகளுக்கான பட்ட அங்கிகள் (Cloak) எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வரை முற்பகல் 10 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை திறந்தமற்றும்தொலைக் கல்வி நிலையத்தில் வைத்து வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்படி நிலையத்தினால் மேற்கொள்ளப் பட்டுள்ளதென யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்துள்ளார். (இ

## பொலிஸாருக்கு ஹெலிகொப்டர்

(கொழும்பு)

குற்றச் செயல்களை தடுக்க பொலிஸாருக்கு ஹெலிகொப்டர் வழங்கப்படவுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இந்த யோசனை முன்வைக்கப் பட்ட போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஹெலிகொப்டர் ஒன்றை பயன்படுத்தினால் இலகுவில் கொள்ளையர்களை பொலிஸாரினால் கைது செய்ய முடியும் என பொலிஸ் அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளனர்.

வாகன நெரிசல்களை கண்காணிப்பதற்கும் ஹெலிகொப்டரின் உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய பொலிஸாரின் பயன்பாட்டுக்காக அரசாங்கம ஹெலிகொப்டர் ஒன்றை வழங்கவுள்ளது. (இ-3)

## சாஸ்திரங்கள்

✦ அம்மன் கோவில்களுக்குச் செல்லும் போது அம்மன் பிரசாதமாக எலுமிச்சம்பழம் வழங்கப்படும். வீட்டுக்கு வந்தவுடன் அந்த எலுமிச்சம்பழத்திலிருந்து சாறு பிழிந்தெடுத்து அதில் தேன் கலந்து (உப்பு கலக்கக்கூடாது) இனிப்பாக்கிக் குடித்துவிட வேண்டும். இவ்வாறு இல்லாமல் அந்தப் பழத்தை அழுகிப் போய்விடும்படி செய்தால் அதிலிருந்து தீய சக்திகள் உருவாகி உங்களுக்கு கெடுதல்களைத் தரும்.

-இந்து சாஸ்திரம்

✦ ஆணின் வலது பீஜம் ஏறி, இடது பீஜம் இறங்கியிருந்தால் ஆண் குழந்தைகளாகப் பிறக்கும். இடது பீஜம் ஏறி வலது பீஜம் இறங்கியிருந்தால் பெண் குழந்தைகளாகப் பிறக்கும்.

-சந்தான ரத்தினம்

✦ குத்துவிளக்கு ஐந்து முகம் ஏற்றினால் சர்வ பீடைகளும் நிவர்த்தியாகும். ஐஸ்வர்ய லட்சுமி கடாட்சம் பெருகும்.

-ஸ்ரீகாரணம்

✦ தனக்கு தெரியாமல் பகைவனிடத்துத் தொடர்பு கொள்ளும் நண்பன் பகைவனிடம் தொடர்பு கொண்டு மீண்டும் தன்பால் மீண்ட வீரன் இருவரிடத்தும் மிக்க கவனம் கொள்க. இவர்களை வெல்வது அரிது.

-மனு சாஸ்திரம்

✦ சூரியன் உதிப்பதற்கு முன் வாசல் பெருக்க வேண்டும். சாணம் இல்லாமல் வெறும் தண்ணீர் தெளிக்கக் கூடாது. அன்று எடுத்த புதுத் தண்ணீராக இருத்தல் வேண்டும். ஆள்காட்டி விரலை நீக்கியே கோலம் போட வேண்டும். போடுகின்ற கோடு தெற்குப் பக்கமாக முடியக்கூடாது.

- கோல சாஸ்திரம்

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணிவரை கிளிநொச்சி பிரதேசத்தில சிலாவத்தை, உடுப்பிக்குளம், அளம்பில், குமுழமுனை, செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி, கொக்கிளாய், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில தாராபுரம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (இ-9)

## பொங்கல் விழா-2017

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற்கல்லூரியின் பொங்கல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு கல்லூரி மண்டபத்தில். கல்லூரியின் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.பி.கரன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மூகிழ்நிலை ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் நிகழ்வில் இடம்பெறுமெனபீடாதிபதி அறிவித்துள்ளார். (இ

## வானூர்தி இயக்கவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியில் விமானம் மற்றும் வானூர்தி இயக்கவியல் (Aviation) தொடர்பான கருத்தரங்கு Ravana Aviation Academy இலிருந்து Harsha வால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் பங்கு பெறவுள்ளனர்.

இக்கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை 21 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் க.ம. இராஜேந்திரன் தலைமையில் நடைபெறும் எனவும் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக கணக்காளர் திருமதி கலைச்செல்வி ரமணன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இக்கூட்டத்திற்கு மாவட்டச சங்கப் பிரதிநிதிகளும் சனச வங்கியின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என சங்கத்தின் செயலாளர் செ.சந்திரசேகரம் அறிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் பிரதேச செயலகத்தால் 2017 ஆம் ஆண்டுக்கான உயிர் வாழ் சான்றிதழ் படிவம், புகையிரத ஆணைச்சீட்டு தொடர்பான படிவம் மற்றும் மேற்படி கூட்ட அறிவித்தல் யாவும் கிடைக்கச் செய்யும் வகையில் கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர்களிடம் தொடர்பு கொண்டு பெறுவதுடன் இப் பொதுக்கூட்டத்தில் கலந்து உரிய பயனைப் பெறுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### மூச்சு: மௌனத்தின் நுழைவாயில்

நீ நாள் முழுவதும் பரபரப்புடன் விரைந்து செயற்படும் பொழுது மன அழுத்தம் அதிகமாகிக் கொண்டே போகிறதே தவிர குறைவதில்லை என்பதைக் கவனித்திருக்கிறாயா? நிதானம், ஓய்வெடு என்று உனக்கே நீ சொல்லிக் கொண்டாலும்- ஒரு ஆழ்ந்த உள்மூச்சினை உள்ளிழுத்து. ஆழ்ந்த வெளிமூச்சினை வெளிவிடும்வரை- மூச்சுதான் நம் தேகத்திலிருக்கும் குணமாக்கும் சக்திகளை அடையும் ஒரு வழி. நாம் ஒரு நொடியில் மூச்சினால் நம்முள்ளே உள்ள ஓய்வு தரும் இடத்தை உணரலாம்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### நமசிவாய மந்திரத்தின் மகிமை

பஞ்சாட்சரம் என்பது ஐந்து எழுத்துகளால் ஆனது என்று பொருள். இவை "நமசிவாய" என்பதாகும். "நமசிவாய" என்னும் ஐந்தெழுத்து மந்திரம் சிவனின் மூல மந்திரம். சிவம் என்றால் காரணமில்லாத மங்களம் என்று பொருள்.

பிரபஞ்சம் நாதம் அல்லது ஓசையின் தூலவடிவே. இறைவன் நாதமாயும், நாதத்திற்கு அப்பாற்பட்டும் உள்ளான். நாதத்தின் நாயகனை நாதத்தால்தான் கட்ட இயலும்."நமசிவாய" என்னும் மூலமந்திரத்தை ஓதவேண்டும்.

மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லுதல் தூலஜபம். ஒலி வெளிவராமலும் நாவசைந்து ஓதுதல் சூக்கும ஜபம். நாவசையாது, ஒலி வெளிவராது உள்ளுக்குள்ளே ஓதுதல்தான் உன்னத காரண நிலை. "நமசிவாய" இந்த எழுத்துக்களில், ந - பிருதிவியையும் ம - அப்புவையும், சி - தேயுவையும், வா - வாயுவையும், ய - ஆகாயத்தையும் குறிக்கும்.

மனித உடம்பில் சாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம்,விசுத்தி, ஆக்ஞை என்கின்ற ஆதாரங்கள் இந்த பஞ்சபூதங்களுக்கு உரிய இடமாகும் என்கிறார் திருமூலர். மேலும், மனித இடம்பில் நமசிவாய என்பது, ந - சுவாதிஷ்டானதில், ம - மணிபூரகத்தில், சி அநாகதத்தில், வ - சிசுத்தியில், ய - ஆக்ஞையில் இருப்பதாக சொல்கிறார்.

திருஞான சம்பந்தர் நான்கு வேதங்களுக்கும் மெய்ப்பொருளாக விளங்குவது "நமசிவாய" இது எல்லாவற்றிற்குமான நாதன் நாமம் என்றும் சொல்கிறார். "நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" என்று பஞ்சாட்சர மகிமையை மாணிக்கவாசகரும் கூறுகிறார்.

# இரணைமடு வெற்றிக்கிண்ணம் கிளிநொச்சி செயலக அணி சம்பியன்









கிளிநொச்சி மாவட்ட நீரப்பாசன திணைக்களத்தின் மென்பந்து குழுமத்தினால் முதன் முறையாக நடத்தப்பட்ட இரணைமடு வெற்றிக் கிண்ணத்தினை கிளிநொச்சி மாவட்ட செயலக அணியினர் தம்தாக்கி உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட நீரப்பாசன திணைக்களத்தின் மென்பந்து குழுமத்தினால் மாவட்டத்தின் அரச திணைக்க்ளங்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்ட ம்ென்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி போட்டி நிக ழ்வு (18.01.2017) அன்று கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதல் வீரர்கள் அறிமுகம் இடம்பெற்று முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வீரர்களை அறிமுகம் செய்து வைத்ததுடன் மென்பந்து இறுதிப்போட்டியை ஆரம்பித்து வைத்தார் .

முதலில் களம் இறங்கிய கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள அணியினர் பத்து பந்து பரிமாற்றத்தின் இறுதியில் 70 ஓட்டங்களை பெற்றனர். தொடர்ந்து களமிறங்கிய கிளிநொச்சி மாவட்ட செயலக அணியினர் பத்து பரிமாற்றத்தின் நிறைவில் 71 ஓட்டங்கள் பெற்று இரணைமடு வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கியுள்ளனர்.

இந்த போட்டி நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன்,மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் பிறேம் குமார் மற்றும் திணைக்களத் தலைவர்கள்,அரச உத்தியோக த்தர்கள், மென்பந்து ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து சிறப்பினர். (க)

## சுப்பர்கிங் உதைபந்தாட்டம் இறுதிப்போட்டியில் யங்ஹென்றீஸ்





மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் சுப்ர் கிங் தொடரில் பட்டத்திற்கான உதை பந்தாட்ட தொடரில் 18.01.2017 அன்று நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் 5வது நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணி வீரன் வின்ஷன் ஒருகோலினைப்போட பதிலுக்கு 11 வது நிமிடத்தில் உருத்திரபுரம் அணி வீரன் ஹரிசன் ஒரு கோலினைப்போட முதற் பாதி 1-1 என முடிவுற்றது.

தொடர்ந்த இரண்டாம் பாதியாட்டத்தின் முதல் நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணி வீரன் வின்ஷன் அதிரடியாக மேலும் ஒரு கோலினைப்போட ஆட்டம் சூடுபிடித்தது. இரு அணிகளின் மேலும் கோல் போடும் முயற்சிகளை பின்கள வீரர்கள் சிறப்பாக தடுத்தாடினர்.

போட்டியின் இறுதியில் உருத்திரபுரம் அணி கோல்போட கடுமையாக போராடியபோதும் சில வாய்ப்புகளை வீணடித்தும் யங்ஹென்றீஸ் அணியின் பின்கள வீரர்கள் அதனை முறியடித்ததனாலும் இறுதியில் 2-1 என வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது யங்ஹென்றீஸ். (க)

## குருநகர் பாடும்மீன்களை வீழ்த்தியது யோசப்வாஸ் நகர் ஐக்கியம் அணி



வலிகாமம் லீக்கின் அனுமதி யுடன் குப்பிளான் குறிஞ்சிகுமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் வல்லரசன் உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் இடம்பெற்ற அரையிறுதியை தீர்மானிகும்போடடியல் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து மன்னார் யோசப் வாஸ் நகர் ஐக்கியம் களமிறங்கியது.

ஆரம்பம் முதல் இரு அணிகளும் அபாரமாக ஆடின. 14ஆவது நிமிடம் ஐக்கியம் சார்பாக றொஸ்ரின் பெற்ற கோலுடன் முற்பாதி நிறைவானது.இரண்டாம் பாதியும் பலத்த போராட்டமாகவே இருந்தது. எனினும் சிறப்பாக ஆடிய ஐக்கியம் சார்பாக 36 ஆவது 39 ஆவது நிமிடங்களில் யோன்சன் , யேசுதாஸ் ஆகியோர் ஒவ்வோர் கோலகளை போட்டனர். அத்தோடு சிறப்பாக ஆடிய பாடும்மீன்களது கோல் வாய்ப்புகள் வீணடிக்கப்பட இறுதியில் 03:00 என்ற ரீதியில் ஐக்கியம் வெற்றி பெற்று அரையிறுதியை தக்கவைத்தது.போட்டியின் ஆட்டநாயகனாக யோன்சன் தெரிவானார். (க)

## நல்லூர் பிரதேச செயலகத்தின் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி
## நண்பர்கள், ஜொலிஸ்ரார் சம்பியன்







நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான கூடைப்பந்தாட்ட போட்டியானது 15.01.2017 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்ட மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டு கழகத்தினை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2017 ஆம் ஆண்டு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று 2017 ஆம் ஆண்டு பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டது. (க)

## மக்களின் தேவைகளை...

தற்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை குறித்த கட்சிகள் மேற்கொள்வதாக தெரியவில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எமது பிரதேசத்தில் புதிய புதிய திட்டங்களையோ அல்லது புதிய செயற்பாடுகளுக்கான அனுமதிகளையோ வழங்கும் போது மிகவும் கவனமான முறையில் செயற்பட வேண்டும். மிக முக்கியமாக பிரதேச செயலர்கள், பிரதேச சபை செயலாளர்கள் இவ்விடயத்தில் கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதிகளை வழங்க வேண்டும். பிற்காலத்தில் வரும் பாதிப்புக்களை அறிந்து திட்டங்களை மேற்கொள்வதற்கான அனுமதிகளை வழங்க வேண்டும். துணிந்து எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

தற்போது பாரிய வரட்சியை எதிர்நோக்கியுள்ளோம். ஆனால் குடிநீருக்கு யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை கடந்த காலத்தில் அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து குளங்கள், நீர்நிலைகளை புனரமைப்பு செய்திருந்தால் இவ்வாறு வரட்சியால் ஏற்படப் போகும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது.

மேலும் எமது பிரதேசத்தில் போதைவஸ்து பாவனை அதிகரித்துள்ளது. அதிலும் முக்கியமாக வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் தமது நிகழ்வுகளை இங்குள்ள விடுதிகளில் களியாட்டமாக நடத்துகிறார்கள். கலாசாரத்துக்கு கட்டுப்பட்டு வாழும் எமது பிரதேசத்தில் இவ்வாறாக விடுதிகளில் நடைபெறும் நிகழ்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

அரசியல்வாதிகள் கருத்துக்களை மட்டும் தெரிவிப்பவர்களாக உள்ளார்கள். செயற்பாடுகளை மேற்கொள்வதாக தெரியவில்லை. தற்போதுள்ள அரசும் தமது கட்சியை வளர்ப்பதற்கான செயற்பாடுகளைதான் செய்து வருகிறது. அரசில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளும் தமது கட்சிகளை வளர்ப்பதற்கு தான் முக்கியத்துவத்தைதான் கொடுத்து வருகிறார்கள் அதுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கொடுப்பதாக தெரியவில்லை என இராஜாங்க அமைச்சர் விஜயகலா தெரிவித்த போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், வேறு கட்சிகள் தமது கட்சியை வளர்க்க முன்னுரிமை கொடுத்திருக்கலாம் ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறு செயற்படவில்லை என தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்த இராஜாங்க அமைச்சர், தமிழ் தேசிய கூட்டமைப்பில் பலர் உள்ளார்கள். நான் தனி நபரை கூறவில்லை ஏனையவர்கள் சிலர் அவ்வாறு நடக்கிறார்கள். நாம் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். மக்களை மீண்டும் படுகுழியில் தள்ள தயாராக இல்லை. அபிவிருத்திகள், உதவிகள் நேரடியாக இருக்க வேண்டும். சரியான முறையில் செய்யப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (செ-9)

## 'ஜல்லிக்கட்டை நடத்த...

தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு எதிராக உள்ள தடையை நீக்க கோரி இடம்பெற்று வரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் நேற்று வியாழக்கிழமை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் பிற்பகல் நான்கு மணிக்கு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, வேண்டும் வேணடும் ஜல்லிக்கட்டு வேண்டும், ஈழத்தில் புத்தரின் படையெடுப்பு தமிழகத்தில் ஜல்லிக்கட்டுக்கு தடைவிதிப்பு, மோடி அரசே பேடி அரசே, அழிக்காதே அழிக்காதே தமிழர் பண்பாட்டை அழிக்காதே, நீ ஒடுக்குவது விளையாட்டை மாத்திரமல்ல, ஜல்லிக்கட்டை நடத்தவிடு இல்லையேல் தமிழ்நாட்டை பிரித்துவிடு, இந்திய அரசே ஈழத்தில் மனிதர்கள் கொல்லப்பட்ட போது எங்கே இருந்தாய், தமிழகத்துக்காய் ஈழம் ஈழத்துக்காக தமிழகம். இந்திய அரசே நாம் சிந்திய இரத்தம் போதாதா போன்ற கோசங்களை எழுப்பியவாறும் பாதாதைகளை தாங்கியவாறும் இளைஞர்கள் அங்கு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (செ-15,312)

## லொறி - மோ.சைக்கிள்...

முன்னே சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை முந்தி செல்ல முற்பட்ட லொறி ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் பரந்தன் - முல்லைத்தீவு வீதி புளியம்பொக்கனைக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோ.சைக்கிளில் பயணித்த புளியம்பொக்கனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் - முரளிதரன் (வயது-26) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்தவர் இளைஞர்களின் உதவியுடன் அங்கு வந்த தர்மபுரம் பொலிஸாரின் வாகனத்தில் ஏற்றப்பட்டு தர்மபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக அவர் சிகிச்சைக்கு உட்படுத்த முன்னமே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு லொறி சாரதியையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை படுகாயமடைந்த இளைஞனை சுமார் 30 நிமிடங்களாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல எவரும் முற்படவில்லை எனவும் உடனடியாக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தால் காப்பாற்றியிருக்க முடியும் எனவும் விசனம் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-273, 312)

## அரசியல் தீர்வை பெறு...

உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தங்களுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் அன்று தொடக்கம் இன்றுவரை தமிழர் உரிமைக்காக தங்களது பங்களிப்புக்களைச் செய்திருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் விகிதாசாரம் கணிசமாகக் குறைந்திருக்கின்றது. அதற்குக் காரணம் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கிழக்கிலங்கையில் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்களும் வெளிநாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றுள்ளதும் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளதும் இடம்பெற்றிருக்கின்றது.

இந்த தமிழ் மக்களின் இனவிகிதாசாரத்தை சீர்செய்வதாக இருந்தால் தமிழ் மக்களிடையே ஒற்றுமை அவசியம்.

ஒற்றுமையே பெரும் பலம். கடந்த காலங்களில் நம்மிடையே ஒற்றுமை இல்லாததால் நாம் அடைந்த பாதிப்புக்கள் ஏராளம். அதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இவ்விதமான பொங்கல் விழாக்களினூடாக கலை கலாசார நிகழ்வுகளினூடாக நாம் ஒற்றுமையை வளர்க்கலாம், நாம் தற்போது ஒரு மிக முக்கியமான காலகட்டத்தில் இருக்கின்றோம்.

• எங்கள் நாட்டினுடைய அரசியலில் கடந்த 70 வருடங்களாக பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன, ஆயினும், இந்த நாட்டுக்கு ஒரு நிரந்தரமான நியாயமான அரசியல் தீர்வு அதனூடாக ஏற்படவில்லை.

ஆனால், தற்போது ஒரு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதை நாம் முழுமையாகப்பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என சம்பந்தன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

## தமிழர் தம்மை தாமே...

மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் பொங்கல் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்.

தமிழ் பேசும் மக்களுடைய அபிலாசைகளை முழுமையாக பூர்த்திசெய்யக்கூடிய வகையில் எங்களது பகுதியை நாங்களே ஆளக்கூடிய வகையில் ஆட்சிமுறையைக்கொண்ட புதிய அரசியலமைப்பு சட்டம் ஒன்று உருவாகுவதற்கான கேள்வி இன்று எழுந்துள்ளது.

தீர்வுத்திட்டத்தை நாங்கள் இலகுவாகப்பெற்றுக்கொள்ளமுடியும் என நாங்கள் நம்பிக்கை கொள்ளவில்லை. அதன் காரணமாகவே மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்கள் எழுந்தன.

ஆனால் அதனை நடாத்தி முடிக்கின்ற பொறுப்பு தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. அதனை தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்தேயாக வேண்டிய பொறுப்பு இருக்கின்றது.

ஒரு தீர்வுக்காக உயிர்களைக் கொடுத்து போராடியுள்ளோம். போராளிகளை மட்டுமன்றி மக்களின் உயிர்களையும் இதற்காக கொடுத்துள்ளோம். அவ்வாறான தியாகங்களை செய்த எங்களினால் தீர்வினைப் பெற முடியாமல் போகுமா என்ற ஆதங்கம் பலரிடம் உள்ளது.

இந்த ஆட்சிமாற்றத்தினை ஏற்படுத்திய காலம் தொடக்கம் தமிழ் மக்களை அழித்தொழித்து விடுவார்கள், தமிழர்களுக்கு நியாயமானதை தரமாட்டார்கள் என்ற காரணத்தினால் கடந்த ஆட்சிக் காலத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டோம்.

அதற்காகவே அவர்கள் அகற்றப்பட்டனர். இந்த நாட்டில் இருந்த சிறுப்பான்மை மக்களின் வாக்கு பலத்தினால் அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நம்பிக்கையுடன் தமிழ் மக்கள் வாக்களித்தனர். அதே நம்பிக்கையினை தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் தொடர்ச்சியாக பாரம் கொடுத்தனர். அதன் மூலமாகவே இந்த நிலைக்கு வந்துள்ளோம்.

மற்றைய நாடுகளில் இல்லாத ஒன்றை நாங்கள் கேட்கவில்லை. உலகில் உள்ள எந்த தனி தேசத்துக்கும் எந்த தனி மக்களுக்கும் உரித்துடையதை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடப்பாடு உலகத்துக்கு உண்டு என்ற உணர்வுடன் உலக நாடுகள் எங்கள் பின்னால் வந்தது.

அதுவரைக்கும் பல்வேறு காரணங்களுக்காக எங்களது போராட்டங்களை அனுபவித்திருக்காத நாடுகளும் கூட எங்களுக்கு பின்னால் அணி திரண்டுள்ளன.

தமிழ் மக்களின் சக்தியுடன் தமிழ் மக்களின் ஜனநாயக சக்தியுடன் உலக நாடுகளின் தார்மீக ஆதரவுடன்தான் இந்தளவுக்கு நாங்கள் வந்துள்ளோம்.

தற்போது ஏற்பட்டுள்ள தடங்கலையும் தாண்டி பயணிப்பதற்கு சர்வதேச சக்தியே எங்களுக்கு முக்கியமாக நிற்கின்றது. இதில் இருந்து அரசாங்கம் தவற முடியாது. இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களும் மறுதலிக்க முடியாது என்கின்ற நிலைப்பாட்டில் இன்று உலகம் இருக்கின்றது.

தடங்கல் வரும் என்று எதிர்பார்த்தோம். அதனை எதிர்கொள்வதற்கு தயாராகவே உள்ளோம். அதனைவிட்டு ஓடுவதற்கு யாரும் நினைக்கவில்லை. இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் தடங்கல்களை மீறி தற்போதுள்ள மக்கள் சக்தியோடும்,

உலக ஆதரவோடும் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் எமது மக்கள் தங்களை தாங்களே ஆளக் கூடிய வகையிலான உரித்தினை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பினை உருவாக்குவோம். அதுவே இந்த பொங்கலில் நாங்கள் எடுக்கும் திடசங்கற்பமாகும் என சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவித்தார். (செ-11)

## சமஷ்டி தீர்வுக்கு...

சமஷ்டி தீர்வு தொடர்பில் எவரும் பேச வேண்டாம் என்று குறிப்பிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட வேலைத் திட்ட அமைசசரும், முன்னாள் மனித உரிமைகள் அமைச்சருமான மகிந்த சமரசிங்க, சர்வஜன வாக்கெடுப்பு இல்லாது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்றி தீர்வுக்கான பயணத்தை முன்னெடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றைய தினம் கொழும்பிலுள்ள கட்சி தலைமையகத்தில் நடைபெற்றது.

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வினை நிராகரித்து வேறேதும் தீர்வுகளை அரசாங்கம் முன்வைத்தால் அதனை நிராகரிக்கும்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனிடம் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூட்டாக இணைந்து வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையில் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க, சமஷ்டி தீர்வு தொடர்பாக நினைத்துக்கூடப் பார்க்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

"சமஷ்டி மட்டுமே அரசியல் பிரச்சினைக்கு தீர்வு என்ற அடிப்படையில் செயற்படுவது ஒருபோதும் தீர்வை ஏற்படுத்திக் கொடுக்காது. ஆரம்பத்தில் 13ஆம் திருத்தம் தொடர்பில் சர்ச்சைகள் ஏற்படும் நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் கீழான அதிகாரங்கள்தான் வலியுறுத்தப்பட்டது. அதே நிலைப்பாட்டில்தான் நாம் எப்போதும் இருந்து வருகின்றோம். அவ்வாறு இருக்கையில் சமஷ்டி மூலமாக தேசிய பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என்ற அழுத்தத்தை பிரயோகித்து அல்லது சர்வதேச தூண்டுதலை ஏற்படுத்தி அதன் மூலம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் எவரேனும் பேச்சுவார்த்தைக்கு வருவார்களாயின் அந்த பேச்சுவார்த்தைக்கு ஒருபோதும் இடமில்லை. நாம் ஒருபோதும் சமஷ்டி தீர்வு என்ற கருத்தை ஏற்றுகொள்ள தயாராக இல்லை. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் எப்போதும் ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டில்தான் உள்ளோம்.

ஆகவே அந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. எனினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் இந்த கருத்துக்களை வெளிப்படையாக தெரிவித்து வருகின்ற போதிலும் கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் இதுவரையில் எந்த தீர்மானங்களும் முன்வைக்கப்படவில்லை. ஆனால் அதை விரைவில் முன்வைப்போம். மேலும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நகர்வுகளை முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்பு இல்லாது நாடாளுமன்றத்தின் மூன்றில இரண்டு பெரும்பான்மை மூலம் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலங்களை வைத்து தீர்வுகளை நோக்கி பயணிக்க முடியும். அதை பிரதான இரண்டு கட்சிகளும் முன்னெடுக்கும். அதேபோல் சர்வதேச தரப்பினருக்கு கொடுத்த வாக்குறுதிகள் மற்றும் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எமது இராணுவத்தையும் ஐக்கிய நாட்டையும் காப்பாற்றும் தேசிய பாதுகாப்பு நகர்வுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது" என்றார் மகிந்த சமரசிங்க. (செ-11)

## 'நெடுந்தாரகை'...

இதற்கான இயந்திரமும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு பொருத்தப்பட்டு பணிகள் நிறைவடைந்துள்ளன.

இந்நிலையிலேயே இன்றைய தினம் மக்கள் பாவனைக்காக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா ஆகியோர் இணைந்து கையளிக்கவுள்ளனர். இந்த நிகழ்வில் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு ஆளுநர் றெஜினோல்ட் கூரே மற்றும் பாராளுமன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-4)

## கிணற்றில் விழுந்த இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் விழ்ந்த இளம் பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சிறுப்பிட்டி கிழக்கினை சேர்ந்த சுந்தரலிங்கம் அபிநயா (வயது 20) என்ற இளம் பெண்னே இதில் உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ - 30)

## மேன்முறையீட்டு மனு...

சுமத்தப்பட்டி ருந்தனர்.

இக்கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி படைத்தரப்பால் கருணா குழுவுக்கு வழங்கப்பட்டதாக படைத்தரப்பு ஒப்புக்கொண்டிருந்தது.

இப்படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைக்கு சிங்கள மொழி பேசும் விசேட ஜூரிகள் சபை ஒன்று கடந்த நவம்பர் மாதம் 22ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ரவிராஜ் படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த சகல எதிரிகளும் குற்றமற்றவர்கள் என்ற ஜூரிகள் சபையின் முடிவை ஏற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் சந்தேக நபர்கள் அனைவரும் கடந்த மாதம் 24ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, ரவிராஜின் படுகொலை வழக்கில் சிங்கள மொழி பேசும் ஜூரிகள் சபையின் முடிவை ஏற்று கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த 10ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் ரவிராஜ் படுகொலை வழக்கில் ஜூரிகள் சபை நியமிக்கப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்த பாதிக்கப்பட்ட தரப்பு, குறித்த தீர்ப்பை இரத்துச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்திருந்தது.

அத்துடன், ரவிராஜ் படுகொலை வழக்கில் கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களமும் மேன்முறையீடு செய்திருந்தது.

இந்நிலையில், மனுதாரர் அல்லது மனுதாரரை பிரதிநிதித்துவம் செய்ய எவரும் நீதிமன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை என்ற அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த மனுவை நிராகரித்துள்ளது.

2006ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி கொழும்பு நாரஹேன்பிட்டிய மாதா வீதியிலிருந்து எல்பிட்டிகல மாவத்தைக்குச் செல்லும் வழியில் ரவிராஜ்ºம், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான லக்ஷ்மன் என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குமாரபுரத்தில் 26 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் போதிய ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையிலும், குற்றம் சாட்டப்பட்ட படையினர் அனைவரும் விடுவிக்கப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(செ-11)

## ராஜிதவின் மகன்...

அழைப்பின் பேரிலேயே அவர் இங்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பில் பல முக்கிய அறிவித்தல்களை வெளியிடவுள்ளதாகவும் தெரியவருகின்றது. நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் விஜயம் செய்யும் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சத்துரு சேனாரத்ன, முன்னதாக அன்றைய தினம் பி.ப 02.15 மணிக்கு யாழ்.ஊடகவியலாளர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இச்சந்திப்பு யாழ்ப்பாணம் ஊடகமையத்தில் நடைபெறும். அதன் பின்னர் பிற்பகல் 2.45 மணிக்கு வைத்தியசாலை வீதி ஆசிர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள கிறீன்கிறாஸ் ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடும் நடைபெறவுள்ளது. இதன்போது புதிய அரசியலமைப்பு தொடர்பில் பல முக்கிய அறிவித்தல்களை அவர் வெளியுடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)


CAMBRIDGE ENGLISH
Language Assessment
Authorised Centre



Improve your English Skills
@ ICBT Jaffna Campus

Apply now for New Intake 2017

Accredited by EQAA European Quality Assurance Agency

DIPLOMA IN ENGLISH
Level 01 & Level 02
(2- 4 Months)
A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.

IELTS
PREPARATION COURSE
IELTS Registration & Exam Preparation Classes

Weekdays Evening/ Weekend Morning/ Weekend Evening Classes

- All material used are updated and directly from UK.
- Conducted by experienced and qualified lecturers.
- Free Gift Pack with a CD for listening.

(சி-7294)

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk



### வகுப்புக்கள்

முகாமைத்துவ உதவியாளர் தரம்-III
ஆரம்பம்:-22.01.2017 ஞாயிறு 09.30AM
கணக்காளர் சேவை
செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்
உயர்கல்லூரி
No.81, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
(HNB Assurance Building)
தொடர்பு:-0778760992, 0773443962
(சி-7299)

### வேலையாட்கள் தேவை

அச்சக நிறுவனமொன்றுக்கு
Typing மற்றும் Designing
செய்யக்கூடியவர்கள் தேவை
தொடர்புகளுக்கு: 0773092332

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NP GH XXXX இலக்கமுடைய
Supercub 90 Japan மோட்டார்
சைக்கிள் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு: 0774136298

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# VACANCY

PURCHASING OFFICER REQUIRED FOR OUR HOTEL

**REQUIREMENTS :**

MINIMUM 1 YEAR EXPERIENCE IN PURCHASING
A/L PASSED
AGE BELOW 35 YEARS
MOTORBIKE LICENSE

SEND YOUR CV'S To : hr@thethinnai.com

HOTEL THE THINNAI
86,PALALY ROAD,
THIRUNELVELI, JAFFNA.
0212030400
(7558)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கையின் அதி உயர் அரச போட்டிப் பரீட்சைகளான SLAS, SLEAS (OPEN) போட்டிப் பரீட்சைகளில் சித்திபெற்று நியமனம் பெற்ற மாணவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்


K. கஜனி SLAS - (Rank - 3) SLEAS - (Rank - 29) (Navalar)


S. யசிந்தன் SLAS (Rank - 16) (Navalar)


S. கிஷோக்குமார் SLAS (Rank - 13) (Navalar)


K. தவலோஜினி SLAS (Rank - 35) (Navalar)


M. சங்கீதா SLAS (Rank - 38) (Navalar)


P. துலக்ஷி SLAS (Rank - 54) (Citadel)


V. சோபிகா SLAS (Rank - 97) (Navalar)


R. ராதிகா SLAS (Rank - 99) (Citadel)


R. ராஜ் றெனுசியஸ் SLEAS (Rank - 42) (Citadel)


P. லக்ஷிகா SLEAS (Rank - 52) (Navalar)


B. பிருந்தா SLEAS (Rank - 88) (Navalar)


நசீர் அலி SLEAS (Rank - 96) (Navalar)


K. மீரா SLEAS (Rank - 97) (Citadel)


S. நிருஷன் SLEAS (Rank - 108) (Navalar)

இலங்கை வரலாற்றில் SLAS, SLEAS போட்டிப் பரீட்சையில் அதிசிறப்பு சித்திகளுக்கு உரிய முறையில் வழிகாட்டிய P. உமாசங்கர், P. கமல்தாசன் மற்றும் துறைசார் வளவாளர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:-
True Citadel Academy, Colombo - 06, T.P: 076 535 0999
பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். யாழ்.புத்தகசாலை 22, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
கஜன் புத்தகசாலை, வவுனியா.
Navalar Education Center (NEC) Jaffna. T.P: 077 469 6695
லங்கா புத்தகசாலை (தனியார்) நிறுவனம், கொழும்பு.
பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு. Student's Publication, கொழும்பு.
(C-7297)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.